விலை ரூபா: 08.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 07 ஞாயிற்றுக்கிழமை (22.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 154

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிகத் துரிதமாகப் பணத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு
★ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
★ வங்கிக் கணக்கு அவசியமில்லை
★ நீடிக்கப்பட்ட சேவை நேரம் ★ 365 நாள் சேவை
★ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P : 021 - 2227310, 021 - 2227555, 021 - 2227560,
FAX : 021 - 2227310 E.mail: thirumurugan@eudoramail.com
46 ஆடியபாதம் வீதி (ப.நோ.கூ.ச முன்பாக)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

## திருகோணமலை ஹர்த்தால் தற்காலிகமாக ஒத்திவைப்பு

(நமது நிருபர்)

**திருகோண்மலையில் கடந்த ஐந்து நாட்களாக இடம்பெற்றுவந்த முழுநாள் கடையடைப்புப் போராட்டம் நேற்று மாலை 4.30 மணியிலிருந்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வரை தற்கா்லிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. பௌத்தர்கள் வெசாக் தினத்தை கொண்டாடுவதற்கு வசதியாக தமது போராட்டத்தை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை ஒத்திவைக்க திருமலை தமிழ்மக்கள் பேரவை தீர்மானித்துள்ளது.**

நேற்று ஐந்தாவது நாளாகவும் ஹர்த்தால்; கடையடைப்பு என்பன இடம்பெற்று நகரம் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

பௌத்த சமயத்தைச் சேர்ந்த மக்களின் வெசாக் பௌர்ணமி தினக் கொண்டாட்டங்கள் இக் காலப்பகுதியில் இடம் பெறவிருப்பதனால் மனிதாபிமான அடிப்படையிலும் புரிந்துணர்வின் அடிப்படையிலும் இக் ஹர்த்தால் தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளதாக தமிழ்மக்கள் பேரவையினர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த சில தினங்களாக நகரில் நிலவிவரும் குழப்ப நிலைக்கு முடிவு கட்டும் வகையிலும் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்கும் வகையிலான சந்திப்பு நேற்றுக் காலை திருகோணமலை கடற்படைத் தள மண்டபத்தில் இடம்பெற்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. தலைவர் ஜப்பான் பயணம்

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தலைமையிலான ஜே.வி.பியின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று முன்தினமிரவு ஜப்பான் பயணமாகியுள்ளனர்.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, நந்தன குணதிலக, சுனில் கந்துள்னெட்டி ஆகியோர் இக் குழுவில் அடங்குகின்றனர்.

ஜப்பான் அரசாங்கம் விடுத்த அழைப்பினை ஏற்றே அவர்கள் ஜப்பான் பயணமாகியுள்ளனர். ஜப்பான் விஜயத்தின்போது அங்குள்ள தமது கிளை அலுவலகங்களையும் புனரமைப்புச் செய்யவுள்ளதாக ஜே.வி.பி. விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இரு வாரங்களுக்கு ஜப்பானில் தங்கியிருக்கும் இவர்கள் அரசியல் பிரமுகர்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (ச-04)

## புலிகளின் அலுவலகம் மீது தாக்குதல் வயோதிபப் பெண் ஒருவர் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பெரிய கல்லாற்றிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தின் மீது இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றிரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இக் கைக்குண்டுத் தாக்குதலில் அங்கு நின்றுகொண்டிருந்த 65 வயது பெண்மணி ஒருவரே கொல்லப்பட்டவர் ஆவார். விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்கு இரவு உணவு எடுத்துச் சென்ற பெண்மணியே கொல்லப்பட்டுள்ளார் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-08-04)

## பொதுக்கட்டமைப்பை உருவாக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி அங்கீகாரம்

ஆழிப்பேரலை மீள் அமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை செயல்படுத்தும் ஜனாதிபதியின் சுதந்திரக் கட்சியின் மத்திய குழு ஒருமனதாக அங்கீகாரம் அளித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் கூடிய அக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள், அமைதிப் பேச்சுக்கள் மற்றும் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்டி மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா ஆற்றிய உரை மற்றும் அதைத் தொடர்ந்து ரூபவாஹினியில் அவர் அளித்த நேர்காணல் ஆகியவை குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

பொதுக்கட்டமைப்பை செயற்படுத்த ஜனாதிபதி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்கும் தீர்மானத்தை அரசின் துணை அமைச்சர் டிலான்பெரேரா முன்மொழிந்தார். பின்னர் மத்திய குழு அதனை ஒருமனதாக ஏற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ச-4)

## வடக்குக் கிழக்கில் ஹர்த்தாலுக்கு ஏற்பாடு

(திருகோணமலை)

திருகோணமலை நகர்ப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றக்கோரி வடக்குக் கிழக்கு முழுவதும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பூரண ஹர்த்தாலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுவருவதாக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

எதிர்வரும் இரண்டு நாள்களுக்குள் புத்தர் சிலையை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் வடக்குக் கிழக்கில் தமிழர் தாயகப் பகுதியெங்கும் பெரும் எடுப்பில் ஹர்த்தால் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் கூறினார். (ச-04)

## குடத்தனையில் எலும்புக் கூடு மீட்பு

(குடத்தனை)

வடமராட்சி குடத்தனைப் பகுதியில் கைவிடப்பட்ட இராணுவ மினி முகாம் சூழலில் புதையுண்டிருந்த மனித எலும்புக் கூட்டுத் தொகுதி ஒன்று நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் கட்டடப் பணிகளுக்காக மணல் அகலும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகளே இதனைக் கண்டுபிடித்துள்ளனர். இது தொடர்பாக பருத்தித்துறை நீதிவான், சுகாதார மாவட்ட வைத்திய அதிகாரியுடன் இணைந்து மேற்கொண்ட விசாரணைகளின் போது 25 வயது முதல்

## திருமலையில் புத்தர் சிலையை அகற்றுக:

இடம்பெற்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)

யாடவுள்ளனர். (ச-04)

# புலிகளின் அலுவலகம் மீது தாக்குதல் வயோதிபப் பெண் ஒருவர் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பெரிய கல்லாற்றிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தின் மீது இனந் தெரியாத நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றிரவு 7.30 மணியளவில் இடம் பெற்ற இக் கைக்குண்டுத் தாக்குதலில் அங்கு நின்றுகொண்டிருந்த 65 வயது பெண்மணி ஒருவரே கொல்லப்பட்டவர் ஆவார். விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்கு இரவு உணவு எடுத்துச் சென்ற பெண்மணியே கொல்லப்பட்டுள்ளார் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ச-08-04)

# பொதுக்கட்டமைப்பை உருவாக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி அங்கீகாரம்

ஆழிப்பேரலை மீள் அமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை செயல்படுத்தும் ஜனாதிபதியின் சுதந்திரக் கட்சியின் மத்திய குழு ஒருமனதாக அங்கீகாரம் அளித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் கூடிய அக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள், அமைதிப் பேச்சுக்கள் மற்றும் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்டி மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா ஆற்றிய உரை மற்றும் அதைத் தொடர்ந்து ரூபவாஹினியில் அவர் அளித்த நேர்காணல் ஆகியவை குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

பொதுக்கட்டமைப்பை செயற்படுத்த ஜனாதிபதி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்கும் தீர்மானத்தை அரசின் துணை அமைச்சர் டிலான்பெரேரா முன்மொழிந்தார். பின்னர் மத்திய குழு அதனை ஒருமனதாக ஏற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ச-4)

# வடக்குக் கிழக்கில் ஹர்த்தாலுக்கு ஏற்பாடு

(திருகோணமலை)

திருகோணமலை நகரப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றக்கோரி வடக்குக் கிழக்கு முழுவதும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பூரண ஹர்த்தாலுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுவருவதாக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

எதிர்வரும் இரண்டு நாள்களுக்குள் புத்தர் சிலையை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் வடக்குக் கிழக்கில் தமிழர் தாயகப் பகுதியெங்கும் பெரும் எடுப்பில் ஹர்த்தால் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் கூறினார்.

(ச-04)

# குடத்தனையில் எலும்புக் கூடுமீட்பு

(குடத்தனை)

வடமராட்சி குடத்தனைப் பகுதியில் கைவிடப்பட்ட இராணுவ மினி முகாம் சூழலில் புதையுண்டிருந்த மனித எலும்புக் கூட்டுத் தொகுதி ஒன்று நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் கட்டடப் பணிகளுக்காக மணல் அகலும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகளே இதனைக் கண்டுபிடித்துள்ளனர். இது தொடர்பாக பருத்தித்துறை நீதிவான், சுகாதார மாவட்ட வைத்திய அதிகாரியுடன் இணைந்து மேற்கொண்ட விசாரணைகளின் போது 25 வயது முதல் 40 வயதுக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் புத்தர் சிலையை அகற்றுக; தவறின் அரசிற்கெதிராக போராடுவோம்

## யாழ். மாணவர்கள் எச்சரிக்கை

(திருகோணமலை)

திருகோணமலையில் புத்தர் சிலை அகற்றப்பட்டு இயல்பு நிலை ஏற்படுத்தப் படாவிட்டால் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு அரசிற்கு எதிராக போராட்டங்களை மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய மாணவர் மன்றம் மற்றும் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் என்பன எச்சரித்துள்ளன.

திருகோணமலையில் நடைபெற்றுவரும் வன்முறை தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பு செயற்பாடாகவே திருகோணமலை நகரப் பகுதியில் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு ஆக்கிரமிப்பின் வடிவில் தான் தமிழர்களுடைய மண்ணை ஆக்கிரமிக்க திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை, காலத்திற்கு காலம் ஆட்சிபீடம் ஏறிய சிங்களப் பேரினவாத அரசாங்கம் மேற்கொண்டு வந்தது. எனவே திருகோணமலையில் புத்தர் சிலை வைத்ததும் ஆக்கிரமிப்பின் தொடர்ச்சிதான்.

எனவே உடடினயாக புத்தர் சிலையை அகற்றி சிங்களக் காடையர்களின் வெறியாட்டத்தை நிறுத்தி திருகோணமலை மக்களின் வாழ்வில் வழமையான நிலையை உருவாக்க உரிய நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

இத்தகைய வன்முறைகள் பிரயோகிக்கப்படுவதை மாணவர்கள் ஆகிய நாம் பொறுத்துக் கொண்டிருக்கமுடியாது. எனவே பேரினவாதிகள் எமது மக்களின் உரிமைக்கு மதிப்பளிக்க வேண்டும். தவறின் நாம் சரியான முறையில் சிந்தித்து பேனாக்களுக்குப் பதிலாக மக்களின் உரிமையினைக் காக்கவல்ல ஆயுதங்களை ஏந்த வேண்டிய சூழ்நிலை உருவாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# அனலைதீவில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு கடற்கரையில் நேற்று ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது. தமிழகத்தில் இருந்து தாயகம் நோக்கி திரும்பிக்கொண்டிருந்தபோது படகு கடலில் மூழ்கியதில் நீரில் மூழ்கி உயிரிழந்தவரின் சடலமாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

சடலம் கரையொதுங்கியபோது பொது மக்களினால் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. அதன்போது பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் அடையாளம் காண்பதற்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நடுக்கடலில் நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களின் 7 சடலங்கள் கடந்த வாரம் நெடுந்தீவு கடலில் கரையொதுங்கியமை தெரிந்ததே. (ச-118,08)


SWISS
Mineral Water



Buy Swiss Mineral and win several lakhs worth of prices

Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59

Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63

சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

# இறைவனில் வைக்கும் நம்பிக்கை விண்ணக வாழ்வைத் தரும்

இலட்சியவாதிகள், வெற்றியாளர்கள் பல தோல்விகளைச் சந்தித்தே வெற்றியின் படிக்கட்



டியில் ஏறியுள்ளார்கள். ஒரு தடவையில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தோல்விகளை எங்கே சந்தித்தார்கள் என்று நாம் நினைக்கலாம். ஆனால் அவர்கள் தியாகங்கள் என்ற தோல்விகளைச் சந்தித்தபின் தான் வெற்றியாளர்கள் ஆகியிருக்கின்றார்கள். பல விஞ்ஞானிகள் பல தோல்விகளின் பின்பே உலகிற்கு அரிய பல கண்டுபிடிப்புச் சாதனைகளை வழங்கி இருக்கின்றார்கள் என்பது வரலாற்று உண்மையாகும். இயேசுவின் இறப்பின் பின்னர் அவரது சீடர்கள் பல தியாகத் தோல்விகளுக்கு உட்பட்டவர்கள். மற்றவர்களுக்கு பயந்து சீவித்தார்கள். அச்சமும் நடுக்கமும் கொண்டு அறைகளுக்கு உள்ளே வாழத் தலைப்பட்டார்கள். இயேசு வாக்களித்தபடியே உண்மையின் ஆவியானவர் பெந்தைக் கொஸ்தே நாளில் சீடர்கள் மேல் வந்து இறங்கினார். சக்திகொண்ட சீடர்கள் அறையை விட்டுப்புறப்பட்டு அரங்கங்களில் இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சியம் பகரப் புறப்பட்டார்கள் உண்மை அவர்களைச் செயற்படச் செய்தது. (திரு. பணி 2:1- 4)

## பரமபிதா காட்டியபாதை

### இயேசுவின் தியாகம்

தூய ஆவியானவர் திருத்துவத்தின் மூன்றாம் ஆள் என்று விவிலியம் சான்று பகர்கின்றது. மூவருக்கும் இடையில் உள்ள தனித்துவமே பிதா, சுதன், தூய ஆவியாகும். பிதாவையும் ஆவியானவரையும் மக்கள் காணவில்லை. சுதன் இயேசுக்கிறிஸ்துவை மக்கள் கண்ணாரக் கண்டு அவரது புதுமைகள் போதனைகள் நற்செயல்களிலே ஈர்க்கப்பட்டவர்களாக அவர் சென்ற இடங்களுக்கெல்லாம் அவரைப் பின் தொடர்ந்தார்கள் என்று தூய விவிலியம் விளம்புகின்றது.

இயேசு இவ்வுலகிலே பல தியாகங்களைச் செய்து சோதனைகளில் முகம் கொடுத்து, எதிர்ப்புக்களைச் சம்பாதித்து உண்மைக்குச் சான்றுபகர்ந்த தியாகச் செம்மல். அதனாலேயே இறைவன் இயேசுவை எல்லா முழங்கால்களும் மண்டியிடவும், இயேசு ஆண்டவர் என்று அறிக்கையிடவும் இவ்வுலகக் கட்டுக்களில் இருந்து விடுவித்து, சாவின் பிடியானது அவரை மேற்கொள்ள முடியாமல் மூன்றாம் நாளிலே உயிர்பெற்று எழச் செய்தார்.

### தூய ஆவியானவரே துணையாளர்

கிறிஸ்தவர்களாகிய எம்மை வழிநடத்தி நேரிய பாதையைக் காட்டும் சக்தியானவராகத் தரப்பட்டுள்ளவரே தூய ஆவியானவர் 'தூய ஆவியானவரின் ஆட்கொள்ளப்படலின்றி எவரும் இயேசு ஆண்டவர் என்று சொல்ல முடியாது' (1கொரி 12:3-13) புனித பவுல் அடித்துக் கூறியுள்ளார்.

ஆவியானவரின் சக்தி, வழிநடத்துதல் கிறிஸ்தவ வாழ்விற்கு மிகவும் அவசியமானது என்பது இது புலப்படுத்துகின்றது. பல விதமான கொடைகளை விசுவாசிகளுக்குக் கொடுப்பவர் இந்த வல்லமையின் ஆவியானவரே. ஒரே உடலில் பல உறுப்புகள் இருந்தாலும் உடல் ஒன்றே அதே போலவே பலவிதமான சக்திகளைப் பலர் பெற்றிருந்தாலும் வழிநடத்தும் ஆவியானவர் ஒருவரே. அந்த ஆவியானவரே இன்றும் திருச்சபையை வழிநடத்தி வருகின்றார் என்பது கிறிஸ்தவர்களின் அசைக்க முடியாத விசுவாசமாகும்.

### இறை நம்பிக்கை வாழ்வுதரும்

இன்று உலகத்தில் பல மாற்றங்கள், வளர்ச்சிகள் ஏற்பட்டாலும் அவை எல்லாம் ஒரு நொடிப் பொழுதில் அழிந்துவிடும் என்பதற்கு அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் கட்டியம் கூறியுள்ளது. யாராக இருந்தாலும் எந்த சமயத்தவராக இருந்தாலும் இறைவனில் வைக்கும் நம்பிக்கை விசுவாசமே அவருக்கு விண்ணக பாக்கியத்தைப் பெற்றுத்தரும். உலகின் அர்ப்ப சிற்றின்ப ஆசைகளால் பேரின்பத்தை அனுபவிக்க முடியாது.

உண்மை, நீதி, நேர்மையே விடுதலை வாழ்வுக்கான வழிமுறைகளைக் காட்டி, மற்றவர் செய்யும் அநீதிகளைச் சுட்டிக்காட்டி அநீதியின் பாதையில் நடக்க முற்படுபவர்கள். நெடுங்காலம் வாழ்வு என்னும் கொடையை அனுபவிக்கமாட்டார்கள். நாம் மண்ணுக்குரிய காரியங்களை விடுத்து விண்ணுக்குரிய காரியங்களையே இவ்வுலகில் தேடிச் சேர்த்து வாழ அருள்வேண்டுவோம். □

அன்றனி பீற்றர்

# மஹோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பெருங்குளம் அம்பலவான வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் யூன் மாதம 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம் பெறவுள்ளது.

20 ஆம் திகதி சப்ரத்திருவிழாவும் 21 ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் பௌர்ணமி தினத்தன்று தீர்த்தோற்சவமும், 23 ஆம் திகதி பூங்காவனமும் இடம்பெறவுள்ளது. (க-21)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அணியப் பாடசாலைகளுக்கிடையிலான அமரர் சிவாஸ்கரன் ஞாபகார்த்த விளையாட்டு விழா-2005 நாளை காலை 8.30 மணிக்கு அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் விழா ஒழுங்கமைப்புத் தலைவர் இ.குணநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.(ற-2)

# மாட்டு வண்டிச் சவாரி

(யாழ்ப்பாணம்)

மறைந்த சமூக சேவையாளரும், பிரபல சவாரியாளருமான செ.இளைய தம்பியின் 14 ஆம் வருட நினைவை முன்னிட்டு மகேசன் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும் பிரபல மாட்டுவண்டி சவாரி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணிக்கு கரவெட்டி சோனப்பு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதமவிருந்தினராக மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் வி.இராசையா, கரவெட்டி பிரதிச் செயலாளர் சி.சத்தியசீலன், வடமராட்சி அரசியல்துறை உறுப்பினர் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-5)

# பொதுக் கூட்டம்

(இணுவில்)

வயாவிளான் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு தலைவர் வ.சத்தியசீலன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற-122)

# நாட்டின் தேசியப் பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினையாக அரசாங்கம் நோக்கவில்லை

(கொழும்பு)

இந்த நாட்டின் தேசிய பிரச்சினையைப் பயங்கரவாதப் பிரச்சினையாக அரசாங்கம் நோக்கவில்லையென அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர்,

நிலவும் பிரச்சினைகளை அரசாங்கம் அரசியல் பிரச்சினையாக நோக்குகின்றது.

உலகில் இராணுவ ஆட்சி மற்றும் குடியாட்சி தவிர இருப்பது கூட்டடாச்சியே. இதனால் தேசிய பிரச்சினைகள் தொடர்பில் பொது உடன்பாட்டை ஏற்படுத்த வேண்டும்.

யத்த நிறுத்தத்தின் பின்பு யுத்தமும் இல்லாத சமாதானமும் இல்லாத ஒரு பனிப்போர் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இரு தரப்பினரிடமும் ஆயுதம் இருப்பதினால் சில சம்பவங்கள் அவ்வவ்போது நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. விடுதலைப்புலிகள் அமைப்பு பிரதான அமைப்பாக இருந்தாலும் அதனை ஒரே அமைப்பாக அரசு ஏற்கவில்லை. வடக்கு - கிழக்குத் தவிர்ந்த ஏனைய இடங்களில் 52.3 வீதமான தமிழ் மக்கள் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்கின்றனர்.

இதனால் விடுதலைப் புலிகள் சிங்கள மக்களை கோபமூட்டும் கருத்துக்களை வெளியிடக்கூடாது. பொதுக் கட்டமைப்புப் பேச்சுவார்த்தைக் கட்டத்திலேயே இருக்கிறது எனக் குறிப்பிட்டார். (ற-9)

# செயற்திட்ட கருத்தரங்கு

(சாவகச்சேரி)

டெங்கு ஒழிப்பு வாரத்தினையொட்டி குடாநாடெங்கும் இடம்பெற்று வரும் டெங்கு ஒழிப்பு செயற்திட்டக் கருத்தரங்கு கடந்த 17 ஆம் திகதி சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் நகரசபை அலுவலக, நூலக ஊழியர்களிற்கு டெங்கு ஒழிப்புத் தொடர்பான ஒளி நாடா காண்பிக்கப்பட்டு அதற்கான விளக்கங்களும் சுகாதாரக் கல்வி அதிகாரி சஜிகரனால் வழங்கப்பட்டது. (க-21)

# வற்றாப்பளை உற்சவத்திற்குச் செல்வோர்

# காலவிரயத்தைத் தவிர்க்கும் வகையில் விண்ணப்பப்படிவங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய உற்வசத்திற்குச் செல்வோர் முகமாலைச் சோதனைச் சாவடியில் நெருக்கடிகளைத் தவிர்க்கும் வகையில், பயணிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை யாழ். மாவட்டத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாமென சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில்,

நாளை திங்கட்கிழமை இடம்பெறும் வற்றாப்பாளை கண்ணகை அம்மன் கோவில் பொங்கல் விழாவிற்குப் பக்த அடியார்களை ஏற்றிச்செல்லும், எமது சங்கக் கட்டுப்பாட்டினுள் உள்ள பயணிகள் சிற்றூர்திகளோ அன்றி வேறு பயணிகள் வண்டிகளோ, முகமாலை சோதனைச் சாவடியில் அன்றைய தினம் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடிகளால் நீண்ட நேரந்தரித்து நின்று விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து, செல்வதில் சிரமங்கள் ஏற்படும்.

இதனைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில், சிற்றூர்திகளோ அன்றிப் பயணிகள் வண்டிகளின் உரிமையாளர்களோ அன்றிச் சாரதிகளோ தத்தம் சிற்றூர்திச் சங்கங்களின் மூலம் அவ்விண்ணப்பப் படிவங்களைப் பெறுதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைவாக விண்ணப்பப் படி வங்களைத் தம்வசம் வைத்திருப்போர் தவிர்ந்த ஏனையோர் முற் கூட்டியே சிற்றூதிச் சங்கத்தில் பயணிகளுக்கான படிவங்களைப் பெற்றுப் பயணிகள் விபரத்தைப் பூர்த்தி செய்து தம்பயணத்தைக் கால விரயமின்றி முடித்துக் கொள்ளலாம் என அறியத்தருகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## பாவனைக்குதவாத பொருட்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் உள்ள உணவு விற்பனை நிலையங்களில் கடந்த 13 ஆம் திகதி திடீர் பரிசோதனை மேற்கொண்ட யாழ். மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழு சுகாதாரமற்ற முறையில் அங்கு காணப்பட்ட மனித பாவனைக்குதவாத வடை, இடியப்பம், மலிபன் பிஸ்கட், தோடம்பழம், அப்பிள்பழம், பிட்டு, மிக்சர், கச்சான் போன்றவற்றை கைப்பற்றி உரிமையாளரின் சம்மதத்துடன் முற்றாக அழித்துள்ளது.(ற)

# கௌரவிப்பு விழாவும் நூல் வெளியீடும்

(சாவகச்சேரி)

"கலாபூஷணம்" விருது பெற்ற திருக்கணித பஞ்சாங்கத்தின் ஆசிரியர் வேதாகம பூஷணம் சிவஸ்ரீ. சி.சிதம்பரநாதக் குருக்களை தென்மராட்சி மக்கள் கௌரவிக்கும் விழாவும், "சோதிடம் கற்போம்" என்ற நூல் வெளியீட்டு விழாவும், இன்று பி.ப.2.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

கௌரவிப்பு நிகழ்வில் அருளுரையை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவார்.

"சோதிடம் கற்போம்" என்ற நூலினை பேராசிரியர் ப.கோபால கிருஸ்ணஜயர் வெளியிட்டு வைப்பார்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் நூல் ஆய்வுரையை நிகழ்த்துவார்.

இவ் நிகழ்வில் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி, சிவஸ்ரீ க.கிருபானந்தக்குருக்கள், பேராசிரியர் அ.சண்முகதாஸ், பாராளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், சைவப்புலவர் க. கமலநாதன், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சி.பத்மராணி ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தவுள்ளனர். (க-21)

# பாடசாலைகளின் தேவையை தீர்க்க சிவாஜிலிங்கம் எம்.பி நடவடிக்கை

(பொன்னாலை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் பல்வேறு தேவைகளைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மேற்கொண்டு வருகிறார்.

பாடசாலைகளின் பௌதிக வளத் தேவைப்பாடுகள், மனித வளத் தேவைப்பாடுகள் என்பவற்றைத் தமக்கு அனுப்பிவைக்குமாறும் நேரடியாகப் பாடசாலைகளுக்குச் சென்று குறைபாடுகளைக் கண்டறியக் கூடிய விதத்தில் பாடசாலைகளுக்கு வருகை தரக்கூடிய பொருத்தமான திகதியை அறியத்தருமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பாடசாலை அதிபர்களிடம் கடிதம் மூலம் கேட்டுள்ளார். (ற-49)




# அனலைதீவு-எழுவடிவயல்

## எழுமங்கை நாச்சிமார் என வழங்கும் அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோவில்

# இரதோற்சவ விஞ்ஞாபனம் 22.05.2005

### நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி



சைவ மக்களே வாழும் அனலைதீவிலே எழுவடி வயல் எழுமங்கை நாச்சியார் என வழங்கும் அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் இன்று தேரேறி அடியார்களுக்கு அருள்பாலிப்பதற்காக திருவீதி வலம் வரும் திருக்கோலம் கர்ணத் தெவிட்டாத அற்புதத் திருக்காட்சியாகும்.

தேர்த் திருவிழாவானது அதர்மத்தை அழித்து சாந்தியை அருளைக் குறிப்பதாகும். இன்று தேரேறி வரும் எல்லாம் வல்ல அன்னை அருள் மிகு ஸ்ரீ மனோன் மணி அம்பாள் அநியாயத்தை யும் அக்கிரமங்களையும் அழித்து நல்வாழ்க் கையை அருள வணங்கி தேர்த்திருவிழா சிறக்க அருளாசி வழங்குகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

*இரண்டாவது குருமஹா சந்நிதானம்*
*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.*

### ஆலய பிரதம குருவின் வாழ்த்துச் செய்தி



எல்லாம் வல்ல அனலைதீவு மனோன்மணி அம்பாளின் இரதோற்சவப் பெருவிழா இன்று நிகழ்கிறது.

இன்றைய இரதோற்சவமானது அழித்தலைக் குறிக்கின்றது. ஆகவே கொலை, பாதகச்செயல்கள், குற்றச் செயல்கள் அனைத்தும் அழிந்தொழிய வேண்டும். பஞ்சமா பாதகங்கள் பாரில் இல்லா தொழிய வேண்டும்.

இன்றைய இரதோற்சவம் காண வருகின்ற பக்தர் குழாம் அம்பிகையின் அருள் பெற்று சகல சௌபாக்கியங்களையும் பெற அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

*பிரம்மஸ்ரீ வெங்கடேஸ்வரக் குருக்கள்*
*அரிகரசர்மா.*



மலர் அமைப்பு:-
தி.அஜந்தன்

### மகோற்சவ பிரதம குருவின் ஆசியுரை



அழகும் பொலிவும் மிளிரும் அனலைநகர் எழுவடி வயல் எழுமங்கை நாச்சிமார் ஸ்ரீமனோன்மணி அம்பாளின் இரதோற்சவம் இன்று நடைபெறுவதையிட்டு நான் பெருமகிழ்வடைகிறேன்.

இரதோற்சவ கைங்கரியத்தின் மூலம் சாந்தியும் சமாதானமும் ஏற்பட்டு அனைவரும் சுபீட்சமாகவும் சகல செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல மனோன்மணி தேவியை பிரார்த்திக்கின்றேன்.

*'லோகா சமஸ்த்தா சுகினோபவந்து'*
*ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!*
*சிவஸ்ரீ பால.வை.தியாகராஜக் குருக்கள்*
*ஊரெழு.*

### இரதோற்சவம் காண வாரீர்

அனலையம்பதி உறை ஸ்ரீ மனோன்மணி அம்மன் துணை கொண்டு வாழும் அனைவரையும் சிறந்த பண்பாளராக்கும் சாதனங்களுள் ஆலயம் ஒன்று தான் தலை சிறந்து விளங்குகின்றது எனக் கூறின் அது சாலப்பொருந்தும்.

சிறப்புமிக்க இத்தலத்தில் அடியார்களாகிய நாம் வணங்கித் துதிப்பதோடு மட்டும் நில்லாது சைவத்தையும் தமிழையும் வளர்த்து அவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

ஆலயத் திருப்பணிகளுக்கான நிதியினை ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக்கிளை நடைமுறைக் கணக்கு இல CA 2618இற்கு வைப்பிலிட்டு அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்று வாழ்வாங்கு வாழ அம்மனைப் பிரார்த்திக்கின்றேன்.

*ஆலய நிர்வாகசபை தலைவர்*
*திரு.ச.சிவபாலன்.*

தேர்த்திருவிழா சிறப்புற பிரார்த்திப்போர்


**ஐயனார் ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி,
அனலைதீவு-06,
உரிமையாளர் :-
ச.சிவபாலன்.

**அம்பாள் ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி,
அனலைதீவு-06,
உரிமையாளர் :-
தி.நடனசிகாமணி.

**கந்தசாமி-தீபன் குடும்பம்**
7ஆம் வட்டாரம்,
அனலைதீவு.

**விநாயக ஸ்ரோர்ஸ்**
ஆஸ்பத்திரி வீதி,
அனலைதீவு-02,
உரிமையாளர் :-
எஸ்.தர்மலிங்கம்.

**நாகபரமேஸ்வரி பாடகுசேவை**
அனலைதீவு-02,
உரிமையாளர்:-
பூலோகசுந்தரம்.

**அம்பாளுக்கான நிதியுதவிகள்**
நடைமுறைக்கணக்கு
CA 2618,
இலங்கை வங்கி,
ஊர்காவற்றுறை.

**அஜன் தொலைத்தொடர்பகம்**
அனலைதீவு-05,
0602-213347

**சந்திரன் ஸ்ரோர்ஸ்**
அனலைதீவு-05,
(சந்திரன் கடை)

**ஸ்ரீதேவி ஸ்ரோர்ஸ்**
அனலைதீவு-05,
(நண்ணா கடை)

**சீலன் ரவல்ஸ்**
இல-777,
அனலைதீவு-06.

**தீபன் சிகையலங்கார நிலையம்**
அனலைதீவு-02,
(க.தீபன்)

## பூரணைதின கருத்தரங்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் பொது நூலக கேட்போர் கூடத்தில் நாளை மாலை 4.00 மணிக்கு பூரணைதின கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

நிலவு டொட் கொம் நிர்வாக இயக்குனர் சி.அனுராஜ் 'பொதுத் தகவல் தொழில்நுட்பம்' என்ற பொருளில் உரையாற்றவுள்ளார். (க-29)

## வீடுகளை கையளிக்கும் நிகழ்வு

(பொன்னாலை)

யாழ்.மாவட்டத்தில் 'நிக்கொட்' நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்ட 243 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் விருந்தினராகக் கலந்து கொண்டு பயனாளிகளிடம் வீடுகளைக் 'கையளிக்கவுள்ளார்.

மேற்படி கழகத்தால் சாவகச்சேரி பிரதேசத்தில் 121 வீடுகளும், நாவாந்துறை, கொட்டடி, சூரியவெளி, வில்லூன்றி ஆகிய கிராமங்களில் 122 வீடுகளும் வீட்டுத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. (க-49)

## கமக்கார வங்கி

(பொன்னாலை)

கமநலசேவை திணைக்களத்தின் கமக்கார வங்கி எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை சாவகச்சேரி கமநலசேவைத் திணைக்களக் கட்டடத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

கமநலசேவைத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தலைமையில் அன்று காலை 9.00 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில்,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின நாடாளுமன்ற உறுப்பினர் என்.இரவிராஜ் கலந்துகொண்டு வங்கியைத் திறந்துவைக்கவுள்ளார். (க-49)

## திருடர்கள் நடமாட்டம் அதிகரிப்பு

(கல்வியங்காடு)

கட்டப்பிராய் பகுதியில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் இதனால் மாலைவேளைகளில் மக்கள் வட்டுக்கு வெளியே வர அஞ்சுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாகரிகமாக பகல் வேளைகளில் நடமாடும இத்திருடர்கள் அங்குள்ள வீடுகளை நோட்டமிட்டு விட்டு இரவு வேளைகளில் தமது கைவரிசையைக் கட்டுகின்றனர் எனக் கூறப்படுகின்றது. (க-74)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கில் கடமையாற்றும் நீர் உயிர்வள ஆசிரியர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.கல்வி வலயத்திலுள்ள கல்வி மேம்பாட்டுப் பேரவையில் ஒன்று கூடுமாறு நீர் உயிர்வள ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ற)

## பிஞ்சிலே பழுக்கும் வாழைக்குலைகள்

(இணுவில்)

உடுவில், இணுவில், மருதனார் மடம், உரும்பிராய் போன்ற பகுதியில் வாழைத் தோட்டங்களில் உள்ள வாழைக்குலைகள் பிஞ்சிலேயே மஞ்சள் நிறமாக மாறுகின்றன.

இதற்கான காரணம் தற்போது நிலவும் வெப்பமா? அல்லது ஒரு வகையான நோயா? என விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

இப்படிப்பட்ட வாழைக்குலைகளை நல்ல விலைக்கு விற்க முடியாமல் இருப்பதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (க-122)

# இந்தியாவில் கடல் கொந்தளிப்பு......



கன்னியாகுமரி கடலோரப் பகுதியில் சீறியெழும் கடலலை......



பூத்துறையில் எழும் இராட்சத அலை.....



குடியிருப்புகளுக்குள் உட்புகும் கடல் நீர்....



மீண்டுமொரு சுனாமிக்கு ஆயத்தமா?.....

## சிறுவர்களை இணைப்பதான குற்றச்சாட்டு குறைந்துள்ளது

### ஐ.நா. அதிகாரி தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது படையணியில் சிறுவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவு குறைந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தின் பேச்சாளர் ஜெவ்ரி கீசி தெரிவித்துள்ளார்.

மனித உரிமை அமைப்புக்கள், ஊடகங்கள் முன்னைய காலங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் இளம்பிராயத்தவர்களை தமது அமைப்பில் இணைத்துக் கொள்வதாக அடிக்கடி குற்றம்சாட்டி வந்தன.

இது குறித்து முறைப்பாடுகள் தற்சமயம் குறைந்திருப்பது மகிழ்ச்சியினைத் தருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

## வீதி விபத்துக்களை குறைக்க உடன் நடவடிக்கை எடுங்கள்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தில் வீதி விபத்துக்களை குறைத்தல் தொடர்பாக அரச அதிபா அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கமைவாக விபத்துக்களை குறைக்கும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா சகல உள்ளூராட்சி மன்றங்களையும் கேட்டுள்ளார்.

வீதியின் இரு மருங்கிலுமுளள நடைபாதைக் கடைகளை அகற்றல், போக்குவரத்துக் குறியீடுகளை மறைக்கும் விளம்பரப் பலகைகளை அகற்றல், வீதியோரங்களில் தனிநபர்களால் பறிக்கப்படும் கல், மண் முதலியவை இருப்புக் கொள்ளவிடாது தடுத்தல், கட்டாக காலி நாய்களை அழிப்பதோடு ஆடு, மாடு முதலியன வீதிகளில் நடமாடாதவகையில் நடவடிக்கை எடுத்தல், பிரதான சந்திகளில் வாகனங்களுக்கான பொருத்தமான தரிப்பிட ஒழுங்கு முதலிய விடயங்களில் கவனம் செலுத்தி விபத்துக்களைக் குறைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (க-21)

## நேர்முகப் பரீட்சை

(பொன்னாலை)

ஆசிரிய கலாசாலைகளுக்கு 2005 கல்வியாண்டிற்கு ஆசிரிய மாணவர்களைத்தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 26, 27,28ஆம் திகதிகளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை அழைப்புக கடிதங்கள் ஏற்கனவே அனுப்பிவைக்க பட்டுள்ளன என கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆஹ்ரீஸ்கந்த மூர்த்தி தெரிவித்தார். (க-49)

## மீண்டும் பாதீனியம்

(இணுவில்)

மருதனார்மடம் பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் பாதீனிய பூண்டு அதிகளவில் காணப்படுகின்றது.

இதனை அகற்றுவதற்கு எந்தத் திணைக்களங்களோ, சங்கங்களோ முன்வரவில்லை.

இவற்றக்கு அண்மையில் பாரியளவலான விவசாய செய்கை மேற்கொள்ளப்படுவதுடன் கால்நடைகளும் பெருமளவு வளர்க்கப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-122)

## சைக்கிள்களை நிறுத்த தடை

(இணுவில்)

மருதனார்மடம் சந்தைக்கு வருகின்ற பொதுமக்கள் தமது சைக்கிள்களை சந்தையின் கிழக்குப் புறமான காங்கேசன்துறை வீதியில் நிறுத்துவதற்கு சந்தை நிர்வாகத்தினால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் இருந்தும் வீதி ஓரத்தில் சைக்கிள்கள் நிறுத்துவதனால் சந்தைக்கு சுமையுடன் வரும் விவசாயிகள் பலரும் பலதரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-122)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய உழவு இயந்திரங்கள் மடக்கிப் பிடிப்பு

(கல்வியங்காடு)

சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த இரு உழவு இயந்திரங்கள் கடந்த 17ஆம் திகதி அதிகாலை கோப்பாய் பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டன.

உழவு இயந்திரங்கள் மூலம் சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த மட்டுவில் மற்றும் சரசாலையைச் சேர்ந்த இரு நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 18 ஆம் திகதி யாழ்.நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும விசாரணை செய்த நீதிவான் இ.த.விக்னராஜா குற்றப்பணமாக இருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபாவையும் தர்மப் பணமாக 5 ஆயிரம் ரூபாவையும் செலுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார். (க-74)

## கலைநிலா அரங்கு

(கொழும்புத்துறை)

திருமறைக் கலாமன்ற அரங்கில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணிக்கு கலைநிலா அரங்கு இடம்பெறவுள்ளது.

இதில் சிறப்பு இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (க-51)

## கோப்பாய் கல்விக் கோட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(கோப்பாய்)

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

### வாசிப்பு பிரிவு – I

1ஆம் இடம் - ம.கயானி - சோமஸ்கந்தா கல்லூரி.
2ஆம் இடம் - சி.நிரோஜினி - கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தி.
3ஆம் இடம் - ச.ராஜதுளசி - கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி.

### பிரிவு – II

1ஆம் இடம் - தெ.வாசுகி - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.
2ஆம் இடம் - த.தேவனுஜா - சோமஸ்கந்தா கல்லூரி.
3ஆம் இடம் - ம.சுஜேனி - உரும்பிராய் சந்திரோதய வித்தி.

### பேச்சு பிரிவு – I

1ஆம் இடம் - ஞா.அபிராமி - புனித திரேசாள் மகளிர் கல்லூரி.
2ஆம் இடம் - பி.பகீரதி - உரும்பிராய் சந்திரோதய வித்தி.
3ஆம் இடம் - ரா.தனரோஜினி - கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி.

### பிரிவு – II

1ஆம் இடம் - சா.துஷாந்தினி - உரும்பிராய் இந்துக் கல்லூரி.
2ஆம் இடம் - சி.லிங்கஜன் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.
3ஆம் இடம் - ப.சர்மிஜா - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

### பிரிவு – III

1ஆம் இடம் - இ.வினோஜா - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.
2ஆம் இடம் - ஜெ.இராஜசிருங்காரி - ஊரெழு கணேச வித்தி.
3ஆம் இடம் - தி.நிசாந்தினி - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

### பிரிவு – IV

1ஆம் இடம் - அ.திருமகள் - அச்சுவேலி மத்திய கல்லூரி.
2ஆம் இடம் - யோ.தர்மபாலினி - கோப்பாய் மகா வித்தி.
3ஆம் இடம் - சி.திவ்வியா - இடைக்காடு மகா வித்தி.

### பிரிவு – V

1ஆம் இடம் - க.கலையரசி - புனித திரேசாள் மகளிர் கல்லூரி.
2ஆம்இடம் - ப.பிரியா - அச்சுவேலி மத்திய கல்லூரி.

(தொடரும்)

# நீதிமன்ற உத்தரவுக்கமைய காலந்தாழ்த்தாது புத்தர் சிலை உடன் அகற்றப்பட வேண்டும்

## புளொட் அமைப்பு வலியுறுத்து

திருகோணமலை நகரின் மத்தியில் நகரசபைக்குரிய பகுதியில் எவ்வித அனுமதியுமின்றி திடீரென புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டுள்ளதும் அதனைத தொடர்ந்து அங்கு பதற்ற நிலை தோன்றியுள்ளதும் சமாதான சூழ்நிலையை மேலும் சிக்கலுககுள்ளாக்கியுள்ளதென்று புளொட் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்விடயம் குறித்து புளொட் அமைப்பு விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில்,

சமாதானச் சூழ்நிலையைக் குழப்பியடிக்கும் நோக்குடைய சில பேரினவாத சக்திகளே இதன் பின்னணியில் இருக்க முடியும். அத்துமீறிய குடியேற்றங்கள், இனவாதப் பேச்சுக்கள் போன்றவற்றை இதுவரை கடைப்பிடித்த இச் சக்திகளின் பிந்திய கருவியாக மதம் கையிலெடுக்கப்பட்டுள்ளது.

மதம் என்பது மனிதனையும் சமூகத்தையும் நல்வழிப்படுத்துவதறகான கருவியே என்பதை புரிந்துகொள்ளாமல் அன்பையும் அமைதியையும் போதித்த கௌதம புத்தபகவானின் உருவச்சிலையையே அமைதியைக் குலைத்து குரோதங்களை வளர்க்கப பயன்படுத்த முனைவது வேதனைக்குரியது.

ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வென்பது ஒருவர் மற்றவரின் உரிமைகளையும், உணர்வுகளையும் மதித்து நடப்பதிலேயே தங்கியுள்ளது. பேரினவாதிகளின் முழு இலங்கையையும் சிங்கள பௌத்தநாடாக மாற்றவேண்டுமென்ற சிந்தனையே எமது நாட்டின் இனப்பிரச்சினைக்கான அடிப்படை. முழு நாடுமே சமாதானத்தை எதிர்பார்த்து நிற்கும் இவ்வேளையில் சர்ச்சைக்குரிய சிலையை நிறுவும் இம்முயற்சியானது பேரினவாதம் மீண்டும் தனது நிலைப்பாட்டை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளது.

மேலும், காலந்தாழ்த்தாது நீதிமன்ற உத்தரவுக்கமைய சிலையை அகற்றி, சமாதான சூழ்நிலையை பலப்படுத்த அனைத்து தரப்பினரும் முன்வராதவிடத்து நாடு மேலும் மேலும் முரண்பாடுகளுள்ளும் அழிவுகளுள்ளும் ஆழ்ந்துவிடுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதை நாம வலியுறுத்த விரும்புகிறோம் எனக குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் பொலிஸாருக்கு சன்மானம் வழங்கி ஊக்குவிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

குற்றச் செயல்களைத் தடுபபதற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குக் கூடுதலான சன்மானங்களை வழங்கி ஊக்குவிக்கப போவதாக பொலிஸ்மா அதிபர் சந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது பெரும் சவாலாக அமைந்துள்ளது. இந்த சவாலை எதிர்கொண்டு உண்மையாகவும் திறமையாகவும் சேவைசெய்து பொலிஸ் திணைக்களத்திற்கு பெருமையைப் பெற்றுத்தரும் எந்தவொரு தரப்பிலான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் கூடுதலான ஊக்குவிப்புக்கள் வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பணப்பரிசுகளை வழங்கும் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பொலிஸ்மா அதிபர் இதனைத் தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் மீதும், கண்டி தலதா மாளிகையின் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்ட சமயம் அவற்றை முறியடிப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய 217பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இந்நிகழ்வில் பணப்பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய பொலிஸ்மா அதிபர், கடந்த 6மாத காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைபபுக்கள் காரணமாக குற்றசசெயல்களுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் பல நபர்களைக் கைது செய்ய முடிந்தது எனத் தெரிவித்தார்.

கொள்ளைக் கோஷ்டியினர் பலர் வெளிநாடுகளுக்குத் தபபிச்சென்றிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-9,4)

# தமிழ்த் தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்விவலயத்திற்குட்பட்ட பாடாசலைகளுக்கிடையிலாக தமிழ்த் தினப் போட்டி யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இன்று ஞாயிற்றுக் கிழமையும் 24ஆம் திகதியும் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறும என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான சானறிதழ் வழங்கும் வைபவம் 24ஆம திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-19)


## நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்

திருஞான சம்பந்த சுவாமிகள் அற்புத உற்சவத்தை முன்னிட்டு நடாத்தப்படும்

## திரு நெறிய தெய்வீக விழா

இடம் - ஆதீன கலாமண்டபம்

**22.05.2005 (இன்று) ஞாயிறு எட்டாம் நாள்**

மாலை 4.30-5.30 மங்கல இசை

திரு.வசந்த மோகன், சுதா குழுவினர், கட்டைப்பிராய்.

இறைவணக்கம் :- E.பேரானந்தரூபன்

மங்கள விளக்கேற்றல் :-

வரவேறபுரை :- திரு A.கோபாலகிருஷ்ணன் (ஆதன ஆலோசனைக் குழு உறுப்பினர்).

மாலை 5.30-6.00 வரை

சிறப்புச் சொற்பொழிவு :-பண்டிதர் V.பேரின்பநாயகம் அவர்கள்.

6.00-6.30 இசை அரங்கு

பாட்டு :- R.சுரசாகித்தியன்
வயலின் :- ஜெனனி நல்லைநாதன்
மிருதங்கம் :- T.வரோதயன்

6.30-7.00 இசை அரங்கு

பாட்டு :- R.சஸ்ரிக்குமரன்
வயலின் :- A.ஜெயராம்
மிருதங்கம் :- N.சதீஸ்குமார்

மாலை 7.00-8.15வரை இசைக்கச்சேரி

பாட்டு :- மேரி சரோஜா ஜஸ்ரின்
வயலின் :- பாக்கியலட்சுமி நடராசா
மிருதங்கம் :- S.மகேந்திரன்
முகர்சிங் :- S.விமல்சங்கர்

இரவு 8.15முதல் இசை நாடகம்

இணுவில் இளந்தொண்டர் சபை வழங்கும் "பக்த நந்தனா"

இறைவணக்கம் :-

விளம்பர அனுசரணை — E.S.பேரம்பலம் சகோ நிறுவனம்

இல.50, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# தேர்த் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வேலணை பெரியபுலம் ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயில வருடாந்தத் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை முப 10.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும், நாளை மு.ப. 10.00 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

தினமும் மாலை 6.00 மணிக்கு கான கதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் "கம்பராமாயணம்" பற்றிய தெய்வீகத் தொடர் இசை சொற்பொழிவு தீர்த்தத் திருவிழாவன்று ஸ்ரீ ராமபட்டாபிஷேகத்துடன் பூர்த்தியாகும். (ற)

# விதிவிடப் பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனத்தின் மானிப்பாய் பிராந்திய சமாதானக் குழு உறுப்பினர்களுக்கான வதிவிடப் பயிற்சிக் கருத்தரங்னு 'உருவாகும் இளையவர்கள்' என்ற கருப்பொருளில் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் அகவெளி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கியூடெக் இயக்குனர் அருட்பணி C.G.ஜெயக்குமாரும், போதகர் ஜோய் மற்றும் திருமறைக்கலாமன்றம், இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றின் வள வாளர்களும் கலந்துகொண்டு நெறிப்படுத்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் மானிப்பாய் பிரதேச இந்து, கிறிஸ்தவ இளைஞர், யுவதிகள் 45 பேர் பயனாளிகளாகப் பங்குபற்றிப் பயன் பெறவுள்ளனர். (ற)

# புதிய கற்கை நெறி

அரச மற்றும் தனியார் துறைகளில் கடமையாற்றும் அதிகாரிகளுக்கென மேலும் பட்டதாரி கல்வி நெறிகளை இலங்கை அரச நிர்வாக அபிவிருத்தி நிலையம் அறிமுகம் செய்யவிருக்கின்றது.

பொது நிர்வாகம், அரச, நிதி, முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பட்டதாரி மற்றும் பட்டதாரி பின படிப்பு பாடநெறிகளுக்கான விணணப்பங்கள் அடுத்த மாதம் முதல் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன. (ற-9)


# VACANCIES

## MEDIA RESOURCES AND TRAINING CENTRE

**University of Jaffna, Sri Lanka**

Media Resources and training Centre is training the journalists in various aspects of journalism. It strives to uplift the capacity of the working journalists in Jaffna. It is planning to have a full time Diploma Course and we need energetic and devoted persons as Training Co ordinator and Trainer. Therefore, the Media Resources and Training Centre will entertain applications from suitably qualified persons up to 15.06.2005 for the following posts (on contract)

### 1.Training Co - ordinator

salary : Negotiable
Qualification:

- Experience in Training with an experience in a Media for a considerable time.
- Desirable to those who have a good knowledge of Tamil and English Language and communicative skills and knowl edge of Information and Communication Technology.
- With drive and passion for journalism. Ready to work out side ordinary working hours.

Submit a written note not exceeding 5 Pages outlining your ideas and visions for media and training in Jaffna.

### 2.Trainers

salary : Negotiable
Qualification:

- Preference will be given to those who have experi ence in editing a Tamil news paper or work experience in a Media for considerable period of time.
- Desirable to those who have a good knowledge of Tamil and English Language and Communicative skills and knowledge of Information and Communi cation Technology.

Application forms and other details may be obtained from the office of the Media Resources and Training Centere at 84, Jumma Mosque lane, Jaffna OR you could download application form from the Home Page of university of Jaffna. web address: www. jfn.ac.lk A copy of the application should be submitted through E - mail also. E-mail address: sanmuga 2003 @ yahoo.com Those who are selected by the search Committee will be notified on 15.07.2005. The selected candidates will commence their work on 1th September 2005.

Appilications received after the closing date will be rejected without intimation.

Director
Media Resources and Training Centre
University of Jaffna,
Sri Lanka.

Prof. A.Sanmugadas
Director
MRTC, UNIVERSITY OF JAFFNA.

(C-1377)


# தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான துரித செயலணியின் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான துரித செயலணியில் (Tafren/ ரவ்ரென்) துரித வருமான மட்டல் தொடாபாக ஆராயும் கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் காலை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு ஜீவனோபாய போல் பிஸ்காட் அமைப்பின் பணிப்பாளர் தர்மசிற விக்கிரம திலக, சர்வதேசியத்தின் ஆலோசகர் சானியமேன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தின் முக்கிய நோக்கம் துரித வருமான மீள் பெறும் திட்டத்துக்கான குழு ஒன்றையும, மாவட்டத்துக்கான செயல திட்டத்தையும் அமைத்தலாகும்.

மேலும், இக் கூட்டத்தில் நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள் பற்றி விளக்கமளிக்கபட்டதோடு குழு உறுப்பினர்களாக எத்தகையோர் இருக்கவேண்டும், உள்ளக செயற்பாடுகளை நடைமுறைபபடுத்துவதற்கான கால எல்லை என்பன தொடர்பாகவும ஆராயப்பட்டது. (ற-19)

# பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கு கூட்டமைப்புக்குள் இணக்கப்பாடு அவசியம்

## -பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

சமாதான செயற்பாடுகளுக்குப் புத்துயிர் கொடுக்க வேண்டுமென்பதை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

சமாதான நடவடிக்கைகளின் தற்போதைய நிலை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துரைக்கையில்,

இது தொடர்பாக அரசாங்கம் சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடாத்தியே தீரவேண்டும். ஜனாதிபதிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே இது தொடர்பாக இணக்கப்பாடு ஒன்று ஏற்பட வேண்டும். அவ் இணக்கப்பாடு இல்லாதமையே நாட்டில் தற்போது நடைபெற்று வரும் முழுப்பிரச்சினைக்கும் காரணமாகும்.

உட்பூசலுக்குத் தீர்வுகாணப்படாமல் நிலவும் பிரச்சினைகள் விமர்சிக்கப்பட்டுவரும் வேளையில், சமாதான செயற்பாடுகளைச் சாதகமாக்க முடியுமா? என்பதை சிந்தித்



துப் பார்க்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஞ-4)

# செய்தித் துளிகள்

## கலந்துரையாடல்

(பொன்னாலை)

தென்மராட்சிப் பிரதேச விவசாயிகளுக்கான கலந்துரையாடல் சாவகச்சேரி கமநல சேவை நிலைய மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கமநல சேவைகள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் க.சுந்தரசேரன் தலைமையில் நடைபெறும். இக் கலந்துரையாடலில், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராய்ந்து அவற்றை அறிந்து தீர்வுகாண்பதற்கான முடிவுகள் எடுக்கப்படவுள்ளதால் இக் கலந்துரையாடலில் தென்மராட்சிப் பிரதேச விவசாயிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-49)

## விசேட கூட்டம்

(ஊர்காவற்றுறை)

தீவக சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் விசேட கூட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு சங்கத் தலைவர் பொ.கிருபைதாஸ் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(க)

## நூற்றாண்டு விழா

(பொன்னாலை)

குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்கின் திருஇருதய சபையின் நூற்றாண்டு விழா எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இளவாலை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் மறைக்கோட்டப் பங்குகளுக்கு இடையிலான பசான் வாசிப்புப் போட்டி சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெறவுள்ளது.

இதேவேளை, வேதாகம மற்றும் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-49)

## இருமாடிக் கட்டடம்

(பொன்னாலை)

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையில் "நிக்கொட்" திட்டத்தின்கீழ் இரு மாடிக் கட்டடம் விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

அதிபர் அலுவலகம், நூல் நிலையம் மற்றும் பத்து வகுப்பறைகளைக் கொண்டதாக இந்த மாடிக் கட்டடம் அமையவிருப்பதாக வித்தியாசாலையின் அதிபர் தி.அருட்பிரகாசபிள்ளை தெரிவித்தார்.(க-49)

## நியமனம்

(பொன்னாலை)

மாரீசன்கூடல் கிராம அலுவலர் பே. இராசரத்தினம் கடந்த மாதம் 26 ஆம் திகதி முதல் தமது 27 வருட அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

இதனையடுத்து மாரீசன்கூடல் பதில் கிராம அலுவலராக, இளவாலை கிராம அலுவலராகக் கடமையாற்றும் இ.லோகநாதன் வலி.தென். மேற்கு பிரதேச செயலரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (க-49)

## பன்னிருதிருமுறை பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமறை மன்றம், மாதாந்த பௌர்ணமி தினத்தில் நடாத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் நாளை திங்கட்கிழமை காலை 5.00 மணிக்கு யாழ்ப்பாணம் சத்திரத்து ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தில் இடம் பெறவுள்ளன.

ஆலய பூசையைத் தொடர்ந்து திருமுறைச் சுவடிகளுக்கும், நால்வர் சிலைகளுக்கும் சோடசோபசார பூசை நடைபெற்று திருமுறை வழிபாடு, திருமுறைச் சுவடிகள் வீதி உலா, அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிருதிருமுறைப் பாராயணம், சொற்பொழிவு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும். (க)

## யுனிசெப் உதவி

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு யுனிசெப் நிறுவனம் மலசலகூட வசதிகளையும் குடிநீர் வசதிகயையும் பெற்றுக்கொடுக்க முன்வந்துள்ளது.

இதுவரை தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, சேந்தாங்குளம், பொலிகண்டி ஆகிய பகுதிகளில் 37 மலசலகூடங்களையும் 8 பொதுக் கிணறுகளையும் அமைத்துக் கொடுத்துள்ளது.

5 குடும்பங்களுக்கு ஒரு மலசலகூடமும் 20 குடும்பங்களுக்கு ஒரு கிணறும் என்ற வகையில் இந் நிறுவனம் அமைத்துக் கொடுத்து வருகின்றது. (க-35)

## புனித யாத்திரை

(ஊர்காவற்றுறை)

மன்னார் மருதமடு புனித- செபமாலை அன்னை யாத்திரை ஸ்தலத்திற்கு ஊர்காவற்றுறை புனித-மரியாயின் சேனை பரலோக இராக்கினி பிரசீடியத்தினர் இன்று ஞாயிற்றுக்கிழமை யாத்திரை மேற்கொள்ளவுள்ளதாக பங்குத் தந்தை அருட்திரு அன்ரனி ஞானப்பிரகாசம் அடிகள் தெரிவித்துள்ளார். (க)

## விண்ணப்பம்கோரல்

(பொன்னாலை)

வலிகாமம் கல்வி வலயத்தில் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவியை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2-1, வகுப்பு2-11 ஐச் சேர்ந்த பட்டதாரிகள் இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1, வகுப்பு 2-1,வகுப்பு 2-11 ஐச் சேர்ந்த பட்டதாரிகள் இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப மாதிரிப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதன்படி தமது விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்து எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (க-49)

## பொங்கல் உற்சவம்

(ஏழாலை)

ஏழாலை துவரக்கலட்டி கண்ணகை அம்பாள் ஆலய வைகாசி விசாகப் பொங்கல் உற்சவம் இன்று அதிகாலை விநாயகர் பொங்கலுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து விசேட பூசை வழிபாடுகளும் நள்ளிரவு விசேட அபிஷேகமும் இடம்பெறும்.

நாளை திங்கட்கிழமை அதிகாலை விசாகப் பொங்கலும் தொடர்ந்து மடையும், மகேஸ்வர பூசையும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (க-131)

## வீதி திருத்தப்படவில்லை

(பொன்னாலை)

அராலி மேற்கு முத்தமிழ் வீதி நீண்ட நாட்களாகத் திருத்தப்படாது இருந்து வருகின்றது.

குன்றும் குழியும் நிறைந்து காணப்படும் இவ்வீதியில் பொது மக்கள் போக்குவரத்துச் செய்யும் போது பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால் சம்பந்தப்பட்டவர்கள் இவ் வீதியை உடன் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (க-49)

## மஹோற்சவம்

(பொன்னாலை)

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இரதோற்சவத் திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளது. (க-49)

## ஆண்டு நிறைவு விழா

(கொழும்புத்துறை)

அரியாலை அருணோதயா சன சமூக நிலையத்தின் 45ஆவது ஆண்டு நிறைவு விழா இன்றும் நாளையும் நிலையத் தலைவர் பொ. ஆராவமுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் நாளை இரவு 8.00 மணிக்கு நடைபெறும் இறுதி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசாவும் சிறப்பு விருந்தினராக அரசியல்துறை நல்லூர் கோட்டப் பொறுப்பாளர் எஸ்.செழியனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து பரிசில் வழங்கல், நடன நிகழ்வுகள் இடம்பெறும்.

சிறப்பு நிகழ்ச்சியாக திருமறைக் கலாமன்றம் வழங்கும் ஏகலைவன் இசைநாடகமும் கரவெட்டி கிழக்கு வளர்பதி நாடக மன்றத்தின் சத்தியவான் சாவித்திரி இசைநாடகமும் இடம்பெறவுள்ளன. (க-51)

## வலம்புரி பிரதேச செய்தியாளர்கள் (பயிலுநர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில் பிரதேச செய்தியாளர்களை (பயிலுநர்கள்) நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த.(சா/த்) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.
- பயிலுநர்கள் தரத்தில் 3 மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக் காலத்தில் சேவையில் திருப்தியும் ஒழுங்கும் ஆர்வமும் காணப்படுமிடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.
- பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
- குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- இலங்கையிலிருந்து வெளிவரும் வேறு பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியாது.
- ஏற்கனவே பத்திரிகைத் துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிப்பின் அவர்கள் நிரந்தர செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

தகுதியானவர்கள் முழுப் பெயர் ,நிரந்தர முகவரி, தபால் முகவரி, பால், பிறந்த தேதி, தே.அ.அ. இல; விவாக நிலை ,தொழில் புரியும் இடம் ,பதவி (இருப்பின் ) கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு, பிரதேசசபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம்(இருப்பின்), கல்வித்தகைமை என்பவை உள்ளிட்டதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை,

*பிரதம ஆசிரியர் வலம்புரி,*
*15 வெள்ளாந் தெரு,*
*வண்ணார் பண்ணை*
*யாழ்ப்பாணம்.*

என்ற முகவரிக்கு 31.05.2005 ஆம் தேதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அன்றேல் தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

*-நிர்வாக உத்தியோகத்தர்.*

## பிரதேச செய்தியாளர் (பயிலுநர்) தெரிவுக்கான பிரதேசங்கள்

### வலிகாமம்

திருநெல்வேலி
நல்லூர்
கந்தர்மடம்
கோண்டாவில்
கொக்குவில்
மானிப்பாய்
உரும்பிராய்
சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தன்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
இணுவில்
மருதனார்மடம்
சுன்னாகம்
மல்லாகம்
தெல்லிப்பழை
நாவாந்துறை
கொழும்புத்துறை
பாசையூர்
வண்ணார்பண்ணை
கொட்டடி
நாயன்மார்கட்டு
கல்வியங்காடு
நீர்வேலி
சிறுப்பிட்டி
ஆவரங்கால்
அச்சுவேலி
இடைக்காடு
புத்தூர்
ஊரெழு
அச்செழு
புன்னாலைக்கட்டுவன்
குப்பிளான்
ஓட்டுமடம்
நீராவியடி
அத்தியடி
அரியாலை

### வடமராட்சி

கரவெட்டி
கரணவாய்
நெல்லியடி
நவிண்டில்
வல்வெட்டி
வல்வெட்டித்துறை
தொண்டைமானாறு
துன்னாலை
அல்வாய்
வியாபாரிமூலை
நாகர்கோவில்
செம்பியன்பற்று
மணற்காடு
கொற்றாவத்தை
பொலிகண்டி

### தென்மராட்சி

நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை
மட்டுவில்
சரசாலை
கொடிகாமம்
வரணி
மிருசுவில்
எழுதுமட்டுவாள்
முகமாலை
பளை

### தீவகம்

நெடுந்தீவு
மண்டைதீவு
ஊர்காவற்றுறை
வேலணை
புங்குடுதீவு
அனலைதீவு
எழுவைதீவு
சுருவில்
நயினாதீவு

### வன்னி

கிளிநொச்சி
வட்டக்கச்சி
முருகண்டி
மல்லாவி
மாங்குளம்
வவுனிக்குளம்
கனகராயன் குளம்
நெடுங்கேணி
புளியங்குளம்
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
விசுவமடு

# சமாதான செயற்பாட்டிற்கு புத்துயிரளிக்க எதுவுமே எஞ்சவில்லை-விமல் வீரவன்ஸ

(கொழும்பு)

சமாதானச் செயற்பாடுகளுக்கு புத்துயிர் கொடுக்க எதுவுமே எஞ்ச



வில்லை என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய உண்மையான சமாதானச் செயற்பாடுகளை எவ்வாறு ஏற்படுத்துவது? என்பது குறித்து பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

மேலும், இலங்கையில் பலம் வாய்ந்த இராஜ்ஜியம் ஒன்றினை உருவாக்குவது எவ்வாறு? என்பது குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்.

நாட்டிற்கு சமாதான செயற்பாடுகள் அவசியமாகின்ற அதேவேளை, அது விடுதலைப்புலிகளுக்கு சட்ட ரீதியான நிலை ஒன்றினை ஏற்படுத்துவதாக அமையக்கூடாது.

ஐக்கிய தேசியக்கட்சி ஏற்படுத்திய யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வாக அமையாது. நிரந்தரத்தீர்வினை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்படவில்லை.

சமாதானம் ஏற்படுவதற்குத் தடையாக இருந்தவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதே அதன் நோக்கமாக இருந்தது.

சமாதானத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு இது ஒரு அடிப்படையாகவிருந்தது எனவும் விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்தார். (ற-4)

# அதிகளவு நீர் அருந்துவதும் ஆபத்து

(வாஷிங்டன்)

அதிகளவு தண்ணீர் குடிப்பவரா நீங்கள். அப்படி என்றால் உங்கள் உடலில் சோடியத்தின் அளவு குறையும். சோடியத்தின் அளவு குறைந்தால் மரணம் ஏற்படலாம் என அமெரிக்கப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க உணவு தொழில்நுட்ப நிறுவனத்தின் பத்திரிகை ஒன்றில் இது தொடர்பாக கூறப்பட்டுள்ளதாவது,

அதிகள்வு தண்ணீர் குடித்தால் இரத்தத்தில் சோடியத்தின் அளவு குறையும். இக்குறைபாட்டால் மரணம் ஏற்படலாம். அதிகளவு தண்ணீர் குடிப்பதால் இரத்தத்தில் ஏற்படும் சோடிய பற்றாக்குறைக்கு 'ஹைபோனடரி மியா' என்று பெயர். இயல்பு நிலையை விட சோடியத்தின் அளவு குறையும் போது இந்த நிலை ஏற்படும். உற்சாகமின்மை, குழப்பம், கவலை போன்றவை 'ஹைபோனட்ரி மியா' வின் அறிகுறிகள்.

ஆனால், இவை நீர்ச்சத்து குறைவிற்கான அறிகுறிகள் என தவறாக நினைத்து விடுகின்றனர். கூடுதலாக தண்ணீர் அருந்தி விடுகின்றனர். இதனால், நிலைமை மேலும் சிக்கலாகி விடுகிறது. இவ்வாறு அந்தப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது. (ற)

# யுத்த நிறுத்தம் பேணப்படுகின்றமைக்கு அரசுக்கும்-புலிகளுக்கும் ஹக்கீம் பாராட்டு

(கொழும்பு)

யுத்த நிறுத்த உடன்படிக்கையை எத்தகைய இடையூறுகள் வந்தாலும் அதனுடன் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினரும் பேணிவருகின்றமை பாராட்டத்தக்கதென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமாதானச் செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளில் முஸ்லிம் மக்களைப் புறக்கணித்து விட்டு பேச்சுவார்த்தை நடாத்த முடியாது. சிலர் முஸ்லிம் மக்களை புறந்தள்ளி விட்டு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

உத்தேசப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளிலும் முஸ்லிம்கள் மறக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இரண்டு நோக்கங்களுக்காக நாடகம் ஒன்றை அரங்கேற்றி வருவதாக ஹக்கீம் குற்றம்சாட்டியுள்ளார்.

மேலும், இருபது வருடகாலமாக நிலவிவந்த யுத்தத்தின் காரணமாக முஸ்லிம் மக்களுக்குப் பல வேறு பாதிப்புகள் ஏற்பட்டதாகவும் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கும் போது முஸ்லிம் மக்களை அரசாங்கம் மறுப்பது தவறான செயல் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-8)

# தென்னிந்தியப் பேராயர் நிர்வாகக்குழுவுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு

(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியத் திருச்சபையின் தென்னிந்தியப் பேராயர் நிர்வாகக் குழுவின் யாப்புக்கு அமைவாக நிர்வாகக் குழுவில் 25 சதவீதமானவர்கள் 35 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

ஆனால், மேற்படி யாப்புக்கு அமைவாக தற்போது தென்னிந்தியப் பேராயர் நிர்வாகக் குழுவில் அங்கம் வகிக்கும் 21 பேரில் 25 வீதமானோர் 35 வயதிற்குட்பட்டவர்களாக இல்லை எனவும், இந்நிலையில் பேராயர் தெரிவு இடம்பெறக் கூடாது என சண்டிலிப்பாய் தென்னிந்தியத் திருச்சபையின் குரு செபஸ்ரியன் அன்ரனி கடந்த ஏப்ரல் 4 ஆம் திகதி யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

பின்னர் இவ்வழக்கு ஏப்ரல் 20 ஆம் திகதி நடைபெற்ற வேளை தென்னிந்தியத் திருச்சபையின் நிர்வாகக் குழுவின் யாப்புக்கு அமைவாக 25 வீதமானோர் 35 வயதிற்குட்பட்டவர்களாக இணைமையால் தற்போது நிர்வாகக் குழு இயங்கக் கூடாது எனவும், தென்னிந்தியத் திருச்சபையின் கீழ் இயங்கும் 'ஆலயங்களில் பேராயர் நிர்வாகக் குழுவினர் ஏதுவாது நிகழ்ச்சிகளை மேற்கொள்வதாக இருந்தால் நீதிமன்றத்தின் முன்னறிவித்தல் பெற்று நடத்தும்படி யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா உத்தரவிட்டிருந்தார்.

ஆனால், நீதிபதியின் உத்தரவிற்கு மாறாக முன்னறிவித்தல் பெறாது எதிர்வரும் 26 ஆம் திகதி கூட்டம் நடாத்துவதற்குத் தென்னிந்திய பேராயர் நிர்வாகக் குழு அதன் உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக நிர்வாகக் குழு உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் அக கடிதத்தை சமர்ப்பித்ததை யடுத்து இது தொடர்பாக விசாரணை செய்து முடிவடையும் வரைக்கும் அடுத்த வழக்கு 27 ஆம் திகதி அன்று நடைபெறவுள்ளது.

அதுவரை தென்னிந்தியப் பேராயர் நிர்வாகக்குழு எந்தவித நிகழ்ச்சிகளையும் மேற்கொள்ளக் கூடாது என மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (ற-19)

# இராசி பலன்

**22.05.2005**
**(வைகாசி 8, ஞாயிற்றுக்கிழமை)**
**சதுர்த்தசி பின்னிரவு 3.34 மணிவரை**
**சுவாதி பிற்பகல் 4.55 மணிவரை**
**இராகுகாலம் 4.22- 5.52 மணிவரை**
**சுபநேரம் 8.52 - 10.22 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | அபூர்வசந்திப்பு, காரிய அனுகூலம், தேகநலன், பெருமையடைதல். |
| இடபம் | தொழில் ஆர்வம், பகைவர் நேசம், சுபநிகழ்வு, முயற்சி பலிதம். |
| மிதுனம் | கௌரவக்குறைவு, புத்திரரால் கவலை, சொத்துப் பிணக்கு, பணக்குறைவு. |
| கடகம் | திடீர்நன்மை, உடல்நலக்குறைவு, புதிய தகவல், காரிய தாமதம். |
| சிங்கம் | இனிய சம்பவம், கூட்டுமுயற்சி, புதிய பொருள் சேர்க்கை, வாக்குமேன்மை. |
| கன்னி | மாதர்நட்பு, பொருள் விரயம், காரிய தாமதம், கடின வார்த்தை. |
| துலாம் | நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, பெரியோர் சந்திப்பு, சயன சுகம். |
| விருச்சிகம் | பிதாசிந்தை, கோபப்படுதல், சுபசெலவு, பிரயாணம். |
| தனுசு | தொழில் சிந்தை, மன மகிழ்ச்சி, போசன சுகம், கலந்துரையாடல். |
| மகரம் | கடின உழைப்பு, சுபநிகழ்வு, எடுத்த கருமங்கள் கைகூடும், உற்சாகம். |
| கும்பம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, வீண் பயம், கட்டுப்பாடு. |
| மீனம் | எதிர்பாராத அச்சம், ஆரோக்கியக் குறைவு, காரிய தடங்கல், போசன சுகம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

*-வளவன்*

# கொளுத்துகிறது அக்னி வெயில் இந்தியாவில் 74 பேர் உயிரிழப்பு

இந்தியா முழுவதும் அக்னி வெயிலின் கொடுமைக்கு இதுவரை 74 பேர் பலியாகியுள்ளனர். கடும் வெயிலின் காரணமாக கர்நாடகாவின் பல பகுதிகளில் தண்ணீருக்குப் பஞ்சம ஏற்பட்டுள்ளது.

அக்னி வெயில் நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சுட்டெரித்து வருகிறது. மகாராஷ்டிரா, கர்நாடகா, ஒரிசாவின் சில பகுதிகள், தெலுங்கானா மற்றும் சட்டீஸ்கார் மாவட்டங்களில் வெயிலின் அளவு அதிகமாகவுள்ளது.

மத்திய மகாராஷ்டிரா தெலுங்கானா தமிழகத்தின் உட்புறப் பகுதிகள், கடலோர கர்நாடகா, கேரள மாநிலங்களில் வெப்பநிலையின் அளவு சராசரியை விட அதிகம். கடும் வெயிலின் காரணமாக கர்நாடகாவின் பலபகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வெயிலுக்கு பலியாவோரின் எண்ணிககை அதிகரித்து வருகிறது.

ஆந்திராவில் 46 பேரும், ஒரிசாவில் 16 பேரும், மேற்குவங்கத்தில் 5 பேரும், ஜார்க்கண்டில் 4 பேரும், உத்தரப்பிரதேசத்தில் 3பேரும வெயிலுக்குப் பலியாகியுள்ளனர். இதையடுத்து வெயிலுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 74 ஆக உயர்ந்துள்ளது. (ற)

# சிறைச்சாலைகளில் முறைகேடு

(கொழும்பு)

சிறைச்சாலைகளுக்குள் பல்வேறு முறைகேடுகள் நிகழ்வதாக நாளாந்தம் தகவல்கள் கிடைத்து வருகின்றன என்று நீதியமைசசர் ஜோன்செனவிரத்தின தெரிவித்துள்ளார்.

இத்தகைய முறைகேடுகளுடன் சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கும் தொடர்பு இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். இந்த முறைகேடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜோன்செனவிரத்தின ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை, சிறைக்கைதிகளுக்கு போதைப் பொருள் உட்பட தடைசெய்யப்பட்ட ஏனைய பொருட்கள் எவ்வாறு கிடைக்கின்றன என்பது குறித்தும் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது.

இத்தகைய முறைகேடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் சட்டரீதியான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நீதியமைச்சு தீர்மானித்துள்ளது. (க-9)

# போக்குவரத்துச் சேவை சீரில்லை

(பொன்னாலை)

அராலி வீதி வட்டுக்கோட்டையூடாகப் பயணிக்கும் யாழ். மாதகல் (789 பாதை இல) பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்து மற்றும் சிற்றூர்திகள் ஒழுங்காக சேவைகளை நடத்துவதில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், தனியார் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள், நோயாளிகள் நீண்டநேரம் காத்திருக்க வேண்டியிருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பஸ்ஸுக்காக நீண்டநேரம் காத்திருக்கும் அவர்கள் தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி அதிக பணம் கொடுத்து பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றதெனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் போக்குவரத்துச் சேவைகளை சிறந்த முறையில் வழங்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பயணிகள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-49)

# நிவாரண அட்டைகளை வழங்குவதற்கு இலஞ்சம் வாங்கிய கிராம சேவையாளர்

## 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில்

(கொழும்பு)

சுனாமிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண அட்டைகளை வழங்குவதற்கென 1000 ரூபாவினை இலஞ்சமாகப் பெற்றதாகக் கூறப்படும் கிராம சேவையாளர் ஒருவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான மஜிஸ்திரேட் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

புல்மோட்டை பிரதேசத்தை சேர்ந்த கிராம சேவையாளர் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நிவாரண அட்டை வழங்குவதற்கு இலஞ்சம் கோரினார் என்ற முறைப்பாட்டையடுத்து இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு நடத்திய விசாரணையின் பின் இந்த கிராம சேவையாளர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பம் ஒன்று தமது பாதிப்புக்கள் குறித்து கிராம சேவையாளரிடம் உரிய தகவல்களை வழங்கிய போதும் அவர்களுக்கு நிவாரணங்கள் கிடைக்கவில்லையென நீதிமன்றத்தில் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

500 ரூபாவினைப் பெற்றுக் கொண்டு 4 நிவாரண உணவு அட்டைகளுக்கு பதிலாக இரண்டு நிவாரண அட்டைகளை வழங்கியுள்ளதுடன், ஏனைய இரண்டு அட்டைகளை விநியோகிப்பதற்கு 1000 ரூபாவினை இக் கிராம சேவையாளர் கோரியதாக ஆணைக்குழு அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இதனையடுத்தே, பிரஸ்தாப கிராம சேவையாளருக்கு 27 ஆம் திகதிவரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ற-8)

# உங்கள் வலம்புரியில்

**எதிர்வரும் 25.05.2005 புதன்கிழமை முதல் கலாநிதி செ.திருநாவுக்கரசு (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை) எழுதும்**

**"ஈழத்தின் தேசிய இனப்பிரச்சினைகள்"**

# மர்ம விமானம் விவகாரத்தில் திருப்பம்; லாரா புஷ் மாறுபட்ட தகவல்



கடந்த 11ஆம் திகதி வெள்ளை மாளிகையின் மது மர்ம போர் விமானம் பறந்த சம்பவம் பற்றி அமெரிக்க அதிபர் புஷ்ஷுக்கு புலனாய்வு அதிகாரிகள் தகவல் தெரிவித்து இருக்கக்கூடும் என்று புஷ்ஷின் மனைவி லாரா மாறுபட்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவில்; நியூயோர்க் இரட்டை கோபுரத்தின் மீது அல் - கெய்டா தீவிரவாதிகள் விமானத்தை மோதி அழித்தனர். இச்சம்பவத்துக்குப் பின், விமானங்களைக் கண்டாலே அமெரிக்காவில் 'அலர்ஜி'யாகி - விட்டது.

கடந்த 11ஆம் திகதி, வெள்ளை மாளிகையின் மீது மர்ம விமானம் ஒன்று பறந்தது. அது, போர் விமானமும் கூட. அச்சமயம், வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் புஷ் இல்லை, வேறொரு இடத்தில் சைக்கிள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்.

மர்ம விமானம் பறந்த சமயத்தில் வெள்ளை மாளிகையில் அதிபர் புஷ்ஷின் மனைவி லாரா, முன்னாள் அமெரிக்க அதிபர் ரீகனின் மனைவி நான்சி ஆகியோர் இருந்தனர். உடனடியாக அவர்களை வெள்ளை மாளிகையில் உள்ள பதுங்கு அறைக்கு புலனாய்வு அதிகாரிகள் அழைத்துச் சென்று பாதுகாப்பாகத் தங்கவைத்தனர்.

மர்ம விமானப் பிரச்சினை ஓய்ந்த பின் வெள்ளை மாளிகை புலனாய்வு அதிகாரிகள் வெளியிட்ட அறிக்கையில், வெள்ளை மாளிகை மீது மர்ம விமானம் பறந்தது பற்றி, சைக்கிள் ஓட்டிக்கொண்டிருந்த அதிபரிடம் கூறவில்லை.

விமானம் பறந்தபோது வெள்ளை மாளிகையில் அவர் இல்லை. அவருக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை இல்லை. எனவே, அவருக்கு இடையூறு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. சைக்கிள் ஓட்டி முடிக்கும் வரை விமானம் பற்றிய தகவல் அவருக்குக் கூறப்பட விலலை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜோர்டான், இஸ்ரேல், எகிப்து உள்ளிட்ட ஐந்து மேற்காசிய நாடுகளுக்கு லாரா நேற்றுமுன்தினம் சுற்றுப் பயணம புறப்பட்டார். அயர்லாந்தில் உள்ள ஷன்னனில் எரிபொருள் நிரப்புவதற்காக அவருடைய விமானம் தரையிறங்கியது.

அங்கு நிருபர்களுக்கு லாரா பேட்டி அளிக்கையில், மர்ம விமானம் பற்றிக் கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த லாரா, மர்ம விமானம் பறந்த தகவல் பற்றி அதிபர் புஷ்ஷிடம் புலனாய்வு அதிகாரிகள் ஒரு வேளை கூறியிருக்கக்கூடும் என்றார்.

அவருக்குத் தகவல் தரவில்லை என்று புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளார்களே. அதற்காக புஷ் கோபப்பட வில்லையா? என்ற மற்றொரு கேள்விக்கு,

இல்லை... இலலை. பாதுகாப்பு விதிமுறைப்படி அவர்கள் செயல்பட்டதாகக் கருதினார். மர்ம விமானம் பறந்த சம்பவத்தின்போது நானும் நான்சியும் கொஞ்சம்கூடப் பயப்படவில்லை எனறு கூறினார் லாரா. (ற)

## சமாதானத் துருப்பு வெளியேற்றம்

கிழக்குத் தீமோரில் இருந்து ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானத் துருப்பினர் வெளியேறி வருகின்றனர்.

கிழக்குத் தீமோரில் ஏற்பட்ட வன்முறைகளை அடுத்து அங்கு ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானத் துருப்பினர் அனுப்பிவைக்கப்பட்டனர்.

சுமார் 9 ஆயிரம் சமாதானத் துருப்பினர் அங்கு நிலைகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது சுமார் 1300 துருப்பினர் மாத்திரமே அங்கு நிலை கொண்டிருப்பதாகவும் அவர்கள் தற்போது அங்கிருந்து வெளியேறி வருவதாகவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

எனினும், ஆலோசனை வழங்கும் நோக்கில் சிறிய குழுவினர் அங்கு இரண்டு மூன்ற வருடங்களுக்குத் தொடர்நதும் தங்கியிருப்பர். (ற-2)

## ஒரே நாளில் மாயமாய் மறைந்த ஏரி நீர்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் ஒரு ஏரியில் ஒரே நாளில் நீர் மாயமாகியுள்ளது.

பூமிக்கு அடியில் உள்ள நிலத்தடி நீரை பலநாட்களாக உறிஞ்சி வெளியே எடுப்பதால் அந்தந்தப் பகுதிகளில் இருந்த நீர் ஏரிகள் நாளடைவில் தூர்நதுபோன தாகப பத்திரிகைகளில் செய்திகள் வந்தன.

ஆனால் ரஷ்யாவில் ஒரு வினோதம் நடந்துள்ளது. ஒரேநாளில் ஒரு ஏரியின் தண்ணீர் மாயமாய் மறைந்துள்ளது.

அங்குள்ள நிழகோரோஸ்கலா என்ற பகுதியில் இது நிகழ்ந்துள்ளது. என்.டிவி டெலிவிஷன் அங்கு அந்த வற்றிய ஏரியைப் படம்பிடித்து ஒளிபரபபியது.

அந்த தண்ணீர் எல்லாம் பூமிக்கு அடியில் செல்லும் நீரோட்டத்தில் போய் கலந்திருக்க வேண்டும். அல்லது பூமிக்கடியில் குகைப் பகுதிக்குள் சென்று மறைந்திருக்க வேணடும என்று அந்தப் பகுதியின் அவசரக்காலப் பணி அமைச்சக பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதி மீனவர்கள் ஏரிநீர் திடீரென மாயமானதைப் பார்த்து திகைத்து நின்றனர். நல்லவேளையாக நீர் திடீரென பூமிக்குள் சென்றதுபோது மனிதர்கள் யாரும் ஏரிநீரின் மீது இல்லை. இருந்திருந்தால் அவர்களும் நீருடன் பூமிக்குள் சென்று புதைந்து இருப்பார்கள எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## நிதிமோசடி குற்றச்சாட்டு; ரஷ்ய மந்திரி கைது

உலக தரிசனம்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் முன்பு அணுசக்தி மந்திரியாக இருந்த எங்ஜெனி அடபோவ் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த மந்திரி பதவியில் இருந்தபோது தனது அதிகாரத்தைப பயன்படுத்தி கோடிக்கணக்கில் மோசடி செய்ததாக புகார் கூறப்பட்டது.

இதேபோல் அவர் அமெரிக்காவில் தங்கியிருக்கும்போது அமெரிக்கா ஒதுக்கிய பணத்தை பெருமளவு மோசடி செய்து இருப்பதாகத் தெரியவந்தது.

எங்ஜெனி அடபோவ் சில மாதங்களுக்கு முன்பு சுவிட்சர்லாந்து சென்றார். அங்கு வைத்து அவரை சுவிஸ் பொலிஸார் மோசடி தொடர்பாக கைதுசெய்தனர். அமெரிக்க பொலிஸார் கேட்டுக்கொண்டதன பேரிலேயே சுவிட்சர்லாந்து பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர்.

இந்த நிலையில், அடபோவை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சுவிட்சர்லாந்தை ரஷ்யா வற்புறுத்தி வருகிறது. அமெரிக்காவில் விசாரணை நடத்தினால் ரஷ்யாவின் அணு ஆராய்ச்சி இரகசியங்கள் அமெரிக்காவின் கைக்குப் போய் விடும் என்று ரஷ்யா பயப்படுறது.

ரஷ்யாவிடம் அந்த மந்திரி ஒப்படைக்கப்பட்ட பிறகு அவர் மீது ரஷ்ய கோர்ட்டில் விசாரணை நடைபெறும். குற்றங்கள் நிருபிக்கப்பட்டால் அவருககு 60 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

### தொடர்ந்தும் அதிபர் பதவி

## முஷாரப்பின் தீர்மானத்திற்கு எதிர்க்கட்சிகள் கண்டனம்



2007 ஆம் ஆண்டில் தமது பதவிக்காலம் முடிந்த பின்னரும் அதிபர் பதவியைத் தொடர பர்வேஷ் முஷாரப் முடிவு செய்துள்ளதற்கு பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

அதிபரின் இம்முடிவு அரசியல் சட்டத்திற்கு முரணானது என்றும், முறையற்றது எனவும் எதிர்க்கட்சிகள் கருத்து வெளியிட்டுள்ளன.

அரசியல் சட்டத்தின்படி, அடுத்த அதிபர் சாதாரண குடிமகனாக இருக்கவேண்டும் என்றும், நாடாளுமன்றத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனவும் எதிர்க்கடசியினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதிபர் பதவியில் தொடர்ந்து முஷாரப் நீடிப்பது குறித்த கருத்து தற்போது வெளியிடப்பட்டிருப்பது, மக்களின் மன ஓட்டத்தையும், கருத்தினையும் தெரிந்து கொள்ளுவதற்காகவே என பாகிஸ்தானின் அரசியல வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (ற)

## சுனாமியால் இன்னும் 10 ஆண்டுகளில் அவுஸ்திரேலியா அழியும் அபாயம்!

### நியூசிலாந்துக்கும் கடும் பாதிப்பு

(கான்பெரா)

அவுஸ்திரேலியாவில் பூகம்பம் ஏறபடாது; சுனாமி பூகம்பம் ஏற்படாத பாதுகாப்பான பகுதியில் அது இருக்கிறது என்பது தவறான நம்பிக்கையாகும். பூகம்பம் ஏற்படும் பகுதியில்தான் அவுஸ்திரேலியா இருக்கிறது. இன்னும் 10 ஆண்டுகளில் சுனாமி தாக்கி அவுஸ்திரேலியா அழிந்து விடும் என்று குயின்லாந்து பல்கலைக்கழக பேராசிரியர் பட்டர் மோரா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

8 ஆயிரம் கிலோமீற்றருக்கு உறுதியற்ற பாறைகள் உள்ளன. இந்தப பாறைகள் பூமி அதிர்ச்சியையும், சுனாமியையும் ஏற்படுத்தக்கூடியவை எனறு ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

உலகின் மூன்றில் ஒரு பகுதி பூகம்பங்கள் இந்தப் பகுதியில்தான் ஏற்படுகின்றன.

கடந்த ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி, சுனாமி இந்தியாவைத் தாக்குவதற்கு 3 நாட்களுக்கு முன்பு, 8.1 ரிக்டர் அளவுள்ள பூகம்பம் நியூசிலாந்து அருகே ஏற்பட்டது. அது அவுஸ்திரேலியாவின் பல பகுதிகளிலும் உணரப்பட்டது.

அமெரிக்காவில் உள்ள சர்வதேச ஆராய்ச்சி பங்குதாரர்கள், "அடுத்த 10 ஆண்டுகளில் 7 ரிக்டர் அளவுக்குப் பூகம்பம் நியூசிலாந்தின் வடக்குப் பகுதியில் ஏற்படும். இதனால் உருவாகும் சுனாமி அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கடலோரப் பகுதியைத் தாக்கி அழிக்கும் என்று எச்சரித்துள்ளனர்.

ரிக்டர் அளவில் ஒவ்வொரு அலகு உயரும்போது, 30 மடங்கு அதிகமான சக்தி பூகம்பத்தால் வெளியேற்றப்படுகிறது. 8.6 ரிக்டர் பூகம்பம் என்றால் அது 10 ஆயிரம் அணுகுண்டுகளுக்குச் சமமானதாகும்.

இதனால் 250 கோடி ரூபாய் மதிப்புள்ள சுனாமி எச்சரிப்பு கருவியைப் பொருத்த அவுஸ்திரேலிய அரசு திட்டமிட்டுள்ளது.

நியூசிலாந்து நாட்டை பூகம்பமும், சுனாமியும் கடுமையாகத் தாக்கும்.

நியூசிலாந்து நாட்டிலும், அதைச் சுற்றிலும் ஒவ்வொரு ஆண்டும் 14 ஆயிரம் பூமி அதிர்ச்சிகள் ஏற்படுகினறன. அவற்றில் 100 முதல் 150 வரையான பூகம்பங்கள் மட்டுமே மக்களால் உணரும்படி இருந்தன.

நியூசிலாந்துக்கு வடக்கே பெரிய அளவில் பூகம்ம உருவாக வாய்ப்பு உள்ளது. இதனால் ஏற்படும் சுனாமி அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கடலோரப் பகுதியை அழித்துவிடும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பீட்டர் மோரா மேலும் கூறினார். (ற)

## போர்முனைகளில் பெண்கள் ஈடுபடுவதை தவிர்ப்பதற்கு அமெரிக்கா தீர்மானம்

(வோஷிங்டன்)

போர்க்களத்தில் இராணுவப்பணியில் பெண்களை ஈடுபடுத்துவதைத் தவிர்க்க வகை செய்யும் புதிய மசோதாவை அமெரிக்க குடியரசுக் கட்சியினர் மேலவையில் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளனர்.

இந்தத் தீர்மானம் குறித்து ஆயுதப் படைப் பிரிவுக் குழுவும் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

போர்முனைகளில் பெண்கள் வாகன ஓட்டுநர்களாகவும், மருத்துவர்கள் மற்றும் தாதியர்களாகவும் தற்போது பணிபுரிந்து வருகின்றனர்.

இதனால் போர்ச் சம்பவங்களின் பாதிப்பு அப்பெண்களுக்கு அதிகம் நேர வாயப்புகள உள்ளதால் இம் முடிவு எடுக்கப்படவுள்ளது.

இந்தத் தீர்மானம் நடைமுறைக்கு வந்தால் தற்போது போர்முனைகளில் பணியாற்றி வரும் 22ஆயிரம் பெண்களைத் திரும்பப் பெறுவதுடன், அவர்களுக்கு மாற்றாக ஆண்களைப் பணி நியமனம் செய்ய வேண்டிய சூழ்நிலை அமெரிக்க இராணுவத்துக்கு ஏற்படும் எனக கூறப்படுகின்றது. (ற)

## அலைகிறாராம் ஓசாமா

சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடன் தற்போது உயிருடன் இருக்கிறார். தன்னுடன் மிகக் குறைந்த எண்ணிக்கையில் சிலரை வைத்துக்கொண்டு இங்குமங்கும் தப்பிகொண்டிருக்கிறார் என்று பாகிஸ்தான் கூறியுள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் கசூரி நேற்றுமுன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது:

ஒசாமா பின்லேடன் ஓரிடத்தில் இருநது வேறொரு இடத்துக்கு அடிக்கடி மாறிக்கொண்டிருக்கிறார். அவருடைய நெருங்கிய வட்டாரம் குறைந்துவிட்டது. ஒரு சிலருடன் மட்டுமே அவர் தங்கியிருக்கிறார். ஓரிடத்தில் நிலையாகத் தங்கவில்லை. ஒரே இடத்தில் தங்கினால் அவரை எளிதாகக் கண்டுபிடித்து விடமுடியும். அடிக்கடி இடம் மாற்றுவதால் இதுவரை அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

எனினும், அல்- கெய்டா தீவிரவாதிகளின் நெட்வேர்க்கைப் பாகிஸ்தான முடக்கியுள்ளது. அந்த அமைப்புடன் தொடர்புடையவர்கள் அவ்வப்போது கைது செய்யப்படுகின்றனர். அவர்களுடைய வங்கிக் கணக்குகள் முடக்கப்படுகின்றன. இவ்வாறு குர்ஷித் கூறினார். (ற)

மானிப்பாய் – சுதுமலை

# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான

# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் 22–05–2005

## பிரதம குருவின் ஆசிச் செய்தி



ஸ்ரீ மாதாவாகவும், ஜகன் மாதாவாகவும் விளங்கும் ஸ்ரீ லலிதா மஹாத் திரிபுரசுந்தரி ஸ்வரூபிணியான ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகை இன்று சித்திரத்தேரில் சௌந்தர்ய அழகுப் பெண்ணாக ஆரோஹணித்து அருட்காட்சி கொடுக்கின்றாள். உயர்திருவிழாவான ரதோற்சவத்தை முன்னிட்டு வெளிவரும் தேர்த்திருவிழா மலருக்கு ஆசிகள் பல வழங்குவதில் சந்தோஷமடைகின்றேன்.

சக்தி வழிபாட்டில் கௌரி கல்யாணம் எனச் சிறப்பிக்கப்பட்டுவரும் அம்பிகையின் உற்சவத்தில் உயர்திருவிழாவான ரதோற்சவம் மிகவும் முக்கியமான உற்சவமாகக் கருதப்படுகின்றது. உற்சவகால சிந்தனை, திருவிழா பலன், உற்சவ அழகு என்பன ஒருங்கே அமையப்பட்டு அழகிய சித்திரத்தேரில் அம்பிகை வேண்டுவதை வேண்டுவோர்க்கு சிறப்பாகக் கொடுக்கும் உலகத்தாயாக அலங்கரிக்கப்பட்டு அருட்காட்சி கொடுக்கின்றாள். எமக்கு வருகின்ற அனைத்து கஷ்டங்களை அம்பிகை ஸம்ஹரித்து ஜெயரூபிணியாக சதுகிரி தேவீஸ்தானத்தில் ஸ்ரீபுவனத்துக்கு ஈஸ்வரியான புவனேஸ்வரியாக வீற்றிருந்து அருள்மழை பொழிகின்றாள். அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம் என்ற அனுபூதி மஹான்களின் வாக்கிற்கேற்ப எமது ஊர்மக்கள், ஆலய தர்மகர்த்தாக்கள், அம்பிகை அடியார்கள், இளைஞர்கள், மாணவ சமூகத்தினர், உத்தியோகத்தினர், நாட்டு மக்கள் என அனைத்து மக்களும் அம்பிகையின் பரிபூர்ணமான அனுக்கிரகத்தைப் பெற வேண்டும் எனப் பிரார்த்தித்து இத்தேர்த்திருவிழா நன்னாளில் ஆசிகள் பல கூறுகின்றேன்.

சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்கள்
பிரதம குரு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள்
தேவஸ்தானம், சுதுமலை.



மலரமைப்பு
வி.கிரிதரன்

## தேவஸ்தான தலைவரின் வாழ்த்துச் செய்தி



ஈழநாட்டின் தலை சிறந்த சக்தி ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் எமது குல தெய்வமான ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகையின் ஆலயத்தில் இன்று வருடாந்த உற்சவத்தின் உயர்விழாவான தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. அம்பிகையின் தேர்த்திருவிழாவைச் சிறப்பித்து வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன.

அம்பிகை அருளால் பல திருப்பணி வேலைகள் நடைபெற்றன. நடைபெறுகின்றன. இன்னும் மேலாக நடைபெறுவதற்கு உள்ளன. இம்முறை நடைபெறும் மகோற்சவம் மேலும் ஒரு சிறப்பைப் பெற்றிருக்கின்றது. புதிதாக அமைக்கப் பெற்ற அன்னதான மணடபத்தில் பதினெட்டு நாட்களும் சிறப்புடன் அன்னதான மகேஸ்வர பூஜை நடைபெறுகின்றது. இம் மண்டப அமைப்பும் மிக விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவையும் உள்ளது. மேலும் திருக்குளம், பரிவார தேவதைகளான விநாயகர், சுப்பிரமணியம் ஆகியோர்களுக்குச் சித்திரத்தேர், மஞ்சம், கைலாச வாகனம் என்பன விரைவாகச் செய்யப்பட வேண்டிய திருப்பணிகளாகும். மேலும் விநாயகருக்கான சித்திரத்தேர்ப்பணி ஆரம்பிக்கப்பட்டு அடுத்த மஹோற்சவத்தில் புதிய தேராக இழுக்கப்பட உள்ளது.

அம்பிகையின் அடியார்கள் அனைவரும் இத்திருப்பணி கைங்கரியங்களுக்கு பேருதவிகள் செய்து அம்பிகையின் அருளுக்குப பாத்திரங்களாக வேண்டுமென அனுதினமும் அம்பாளை வேண்டி நிற்கின்றேன். அன்னை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பிகையும் இந்நன்னாளில் அழகிய சித்திரத்தேரில் நன்கு அலங்கரிக்கப்பட்டு அம்பாள் தேரேறி வந்து அருளாட்சி செய்கின்றாள். அம்பிகையின் தேர்த் திருவிழாவைக் காணுகின்ற அடியார்கள் அனைவருக்கும் சகல விதமான செல்வங்களும் கிடைக்கப்பெறுவதோடு அம்பிகையின் ஆலயத்தை நாட்டின் தலைசிறந்த சக்தி ஆலயமாகத் திகழ வைக்க வேண்டுமென அடியார்கள் யாவரையும் கேட்டு சிறப்பிதழுக்கான வாழ்த்துச் செய்தியினை நிறைவு செய்கின்றேன். எல்லோருக்கும் அம்பிகையின் அருள் கிடைப்பதாக.

கு.கணேசதாசன் (J.P)
தலைவர், ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்,
சுதுமலை, மானிப்பாய்.

## தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்


**ரஞ்சிதா வைத்தியசாலை**
சலவித நோய்களுக்கும் சிகிச்சை மற்றும் இரத்தம், சலம் பரிசோதனை, யாழ். சம்பந்தன் ஆய்வுகூடத்தினரால் விசேட சிகிச்சையாக கண், பல் சிகிச்சையும் பெண்களுக்கான (FACIL) பேசியல, பெண்களுக்கு முகத்தில் வளரும் முடியை இல்லாமல செய்யும் சிகிச்சையும் நடைபெறுகிறது.
சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக தங்க ஆபரணங்களை எண்ணம்போல் தெரிவு செய்திட
**பிரம்யா நகை மாடம்**
யாழ் வீதி, ஆலடிச்சந்தி,
மானிப்பாய்.

குளிர்பான சிற்றுண்டி வகையினை சுவைத்து மகிழ்ந்திட
**மகாலக்ஷ்மி குளிர் சுவையகம்**
மத்திய சந்தி முன்பாக,
யாழ். வீதி, மானிப்பாய்.

அனைத்து ஆடைத் தினிசுகளையும் எண்ணம் போல் தெரிவு செய்திட
**நந்தா பிடவை & பான்சிக்கவுஸ்**
இலங்கை வங்கி முன்பாக
யாழ். வீதி, மானிப்பாய்,

**PC.SYSTEMS**
TOTAL IT SOLUTION PROVIDERS
Computer Sales, Services & Maintenance Software Installation & Development, CD Sales and Recording
Institute of Computer & Electronic Studies
T/P: 021 - 4591525
Email - pcspraja @ Yahoo.Com.
இன்ரநெற் அழைப்புக்கள் (6/=) மட்டும்
Aladi Junction,
Jaffna Road, Manipay.

**ஸ்ரீ சுபா வெதுப்பகம்**
சுதுமலை

ஆங்கில மருந்து வகைகள், பால்மா, பிஸ்கட் வகைகள் அனைத்தும் பெற்றுக் கொள்ள.
**தாரணி பார்மசி & குரோசரி**
சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

பாடசாலை உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள், அழகுசாதனப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள், kit காட் வகைகள் அனைத்தையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
**அபி அழகு மாடம் & பொத்தகசாலை**
சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

**லிங்கம் ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் விற்பனை நிலையம்
மலை வேம்படி,
சுதுமலை மத்தி, மானிப்பாய்.

**அம்பாள் ரேடர்ஸ்**
சைக்கிள் உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் விற்பனை நிலையம்.
மலை வேம்படி,
சுதுமலை மத்தி, மானிப்பாய்.

மர வளைவு அலங்கார வேலைகளை, Wood Cutting Band Saw சிறந்த முறையில் செய்திட
**மயூரா தச்சுத்தொழிற்சாலை**
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

**குலசிங்கம் ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் விற்பனை நிலையம்
சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

## இன்று ஒரு தகவல்

### துரியோதனன்

துரியோதனன் அரண்மனை. அவனது அந்தப்புரத்திற்கு எதிரில் உள்ள ஒரு மண்டபம்.

அங்கு துரியோதனன் மனைவி பானுமதியும் கர்ணனும் அமர்ந்து சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். ஆட்டம் மிகவும் மும்மரமாக நடந்து கொண்டிருக்கிறது.

அந்த சமயத்தில் துரியோதனன் திடீரென்று அங்கே வருகிறான்.

அவன் வருவது கர்ணனுக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அவன் முதுகுக்குப் பின்பக்கமாக இருந்த திசையிலிருந்து துரியோதனன் வருகிறான்.

எதிரில் உட்கார்ந்திருந்த பானுமதி தன் கணவன் வருவதைப் பார்க்கிறாள். ஒரு மரியாதைக்காக எழுந்து கொள்ள முற்படுகிறாள். ஆனால் அதைப் பார்த்த கர்ணன், 'சொக்கட்டான் ஆட்டத்தில் தான் கர்ணனிடம் தோற்று விடுவோம் என்று பயந்து இவள் பாதி ஆட்டத்தில் எழுந்து போக நினைக்கிறாள்' என்று நினைக்கிறான்.

அந்த எண்ணத்தில் அவன் அவள் இடையில் அணிந்திருந்த மேகலையைப் பிடித்து இழுத்துவிடுகிறான்!

உடனே அந்த ஆபரணம் அறுந்து கீழே விழ, அதிலிருந்த முத்துக்களெல்லாம் தரையில் நாலா பக்கமும் சிதறி ஓடின.

அதன் பிறகுதான் தனக்குப் பின்னால் துரியோதனன் வந்திருக்கிறான் என்ற விஷயமே கர்ணனுக்குப் புரிகிறது.

கர்ணனும் பானுமதியும் திகைத்துப் போய் நிற்கிறார்கள்.

'கணவர் இந்தக் காட்சியைப் பார்த்து விட்டாரே!' என்ற பதற்றம் பானுமதிக்கு.

''மாற்றான் மனைவியைத் தொட்டு விட்டோமே!' என்ற பதற்றம் கர்ணனுக்கு.

ஆனால் துரியோதனன் இதைப் பற்றிக் கொஞ்சம் கூட அலட்டிக்கொள்ளவில்லை. இது எதையும் அவன் கண்டு கொள்ளவே இல்லை.

மாறாக, அவன் இவர்கள் இரண்டு பேரையும் பார்த்து என்ன கேட்கிறான்?

"இந்த முத்துக்களை எடுக்கட்டுமா, கோர்க்கட்டுமா" என்று சிரித்துக்கொண்டே வினாவுகிறான்.இந்தக் கேள்வியால்தான் இப்போது ஒரு சந்தேகம்!

கர்ணன துரியோதனனுக்கு நண்பன். அந்த நட்பு காரணமாக துரியோதனன் தரையில் சிதறிய முத்துக்களை மட்டும் பொறுக்கி எடுத்திருக்கலாம். அதற்குப்பிறகு அதைக் கோர்த்து ஆபரணமாக்கித் தருவதற்கு அரண்மனையில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்; ஆதலால் இவன் "எடுக்கட்டுமா?" என்று மட்டும் கேட்டதோடு விட்டிருக்கலாம்.

"கோர்க்கட்டுமா?" என்று கூடுதலாக ஒரு கேள்வியைக் கேட்டானே, அது ஏன்?

அன்றைக்கு அரண்மனையில் இருந்த எல்லோரும் இதைப்பற்றியே யோசித்துக் குழம்பிக்கொண்டிருந்தார்களாம். அங்கே இருந்த அமைச்சருக்கும் இதற்கு விடை தெரியவில்லை! எல்லோரும் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்த சமயத்தில்... நல்ல வேளையாக சகாதேவன் தற்செயலாக அந்தப் பக்கம் வந்து கொண்டிருந்தான்.

அவன் சாஸ்திர ஞானத்தில் கரை கண்டவன். ஆதலால் எலலோரும் சகாதேவனிடம் ஓடிச் சென்று தங்களைக் குழப்பிக்கொண்டிருந்த சந்தேகத்தைத் தெரிவித்தார்கள்.

சகாதேவன் சிரித்துக்கொண்டே பதில் சொல்லியிருக்கிறான். அவன் சொன்ன விளக்கம் இதுதான்.

"ஒருவனுக்குப் பயம் அதிகமாக வந்துவிட்டால் அவன் கை, கால் நடுங்கும்! அது இயற்கை. அதுபோலவே எவன் ஒருவன் ஆத்திரப்படுகிறானோ அவனுக்கும் கை, கால் நடுங்கும்- உதறும்!''

"இந்த இடத்தில் கர்ணனும் பானுமதியும் இந்த நிலைமையில் இருக்கிறார்கள். அதாவது பயம் காரணமாக அவர்களின் கை, கால் நடுங்குகிறது!

"துரியோதனனுக்கு இந்த இடத்தில் ஆத்திரம் காரணமாக கை, கால் நடுங்க வேண்டும்... ஆனால் அப்படி ஆகவில்லை. அவன் நிதானமாக இருக்கிறான். அமைதியாக இருக்கிறான். அதற்கு என்ன காரணம்? அவன் தன்னுடைய மனைவியையும் சந்தேகப்படவில்லை.. தன்னுடைய நண்பனையும் சந்தேகப்படவில்லை! அதனால் ஆத்திரம் அடையவில்லை! கை, காலும் உதறவில்லை! என் கை, கால் நடுங்கவில்லை.. ஆதலால் என்னால் முத்துக்களை எடுக்கவும் முடியும், கோர்க்கவும் முடியும். நான் நிதானமாகத்தான் இருக்கிறேன்' என்பதை அவர்களுக்கு உணர்த்துவதற்காக துரியோதனன் 'கோர்க்கட்டுமா?' என்று கூடுதலாக ஒரு கேள்வியைக் கேட்டான்.''

இதுதான் சகாதேவன் சொன்ன விளக்கம். அவசரப்பட்டு ஆத்திரப்படக்கூடாது, நிதானம் தவறக் கூடாது, அமைதியை இழக்கக் கூடாது என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கெட்டவன் என்று நாம் பொதுவாக நினைக்கும் துரியோதனனிடமும் இப்படி ஓர் உயர்ந்த குணம் இருந்திருக்கிறது பார்த்தீர்களா?

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# பொதுக்கட்டமைப்பு தொடர்பில் நிலைமை சிக்கல்! ஏற்படுத்துவது ஜனாதிபதிக்கு கடினமான விடயம்!!

- தேசிய சமாதானப் பேரவையின் ஊடகப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா

(கொழும்பு)

**உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பை நிறுவுவது ஜனாதிபதிக்கு மிகக் கடினமான ஒரு விடயமாக இருக்கும். பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஜனாதிபதி ஒரு தனிநபராக இருப்பதனாலும் தெற்கில் சில அரசியல் கட்சிகளால் தெரிவிக்கப்படும் எதிர்ப்புக்களாலுமே அவருக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் தேசிய சமாதானப் பேரவையின் ஊடகப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் நிலைமை சிக்கலாகவுள்ளது!. பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவான சக்திகளைப் போன்று எதிரான சக்திகளும் உள்ளன.

நூடு முன்னோக்கிச் செல்ல வேண்டுமென்றால் விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொள்ளவேண்டும் என்பது தெளிவு. ஏனெனில்,கிழக்கில் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைகின்றது. அங்கு பதற்றத்துக்கும் முரண்பாடுகளுக்கும் மக்கள் முகம் கொடுக்கின்றனர். விடுதலைப புலிகளும் அதிக விரக்தியடைந்துள்ளனர். ஜனாதிபதியின் கண்டி உரையையும் ரூபவாகினியில் ஒளிபரப்பான பேட்டியையும் அடுத்து நாடு முன்நோக்கிச் செல்வதற்கான நம்பிக்கை தோன்றியுள்ளது.

சர்வதேச சமூகம் ஜனாதிபதிக்குத் தெளிவான ஆதரவினைக காட்டியுள்ளது.கடந்த சில வாரங்களில் ஜனாதிபதி குறிப்பிடத்தக்க அளவு சிறுபான்மை மக்களின் ஆதரவினைப் பெற்றுள்ளார். முஸ்லிம்கள் குறிப்பாக பேரியல் அஷ்ரப் இந்தத் திட்டத்துக்கு ஆதரவு அளிக்கின்றார்.

ஆனால் சிங்களவர்கள் பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கின்றனர். பொதுக்கட்டமைப்பை நிறுவதற்கு முடியுமா?எனவும் கேள்வியெழுப்புகின்றனர். இக்கேள்விக்கு உரிய பதில் முடிவு ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தையும் அவரை எதிர்க்கின்றவர்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தையும் பொறுத்தே அமையும்.

கொள்கை ரீதியில் ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரம கொண்டவர் என்ற ரீதியிலும் அரசின் தலைவர் என்ற ரீதியிலும் முப்படைகளின் தலைவர் என்ற ரீதியிலும் அதிக பலம உள்ளது. ஆனால் பிரச்சினை என்னவெனில அவர் ஒரு தனி நபர்.அவர் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற பலம்மிக்க பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பை எதிர்கொள்கினறார் .

அதைவிட அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு உள்ளேயும் எதிர்ப்பு உள்ளது. இந்த எதிர்ப்புக்களை எல்லாம் எதிர்கொள்வது ஜனாதிபதிக்குச் சிரமமாகவுள்ளது.

ஜனாதிபதிக்கான தெரிவுகளில் ஒன்று விடுதலைப் புலிகளுடன் வடகிழக்கில் தளம்பல் நிலையில இருத்தல் அல்லது தெற்கில் அரசியல் காரணமாக தளம் பல்நிலையில் இருக்கவேண்டிய நிலை ஜனாதிப்தியின கடந்த கால நடவடிக்கைளைப் பார்க்கும் போது சமாதான முடிவு ஒன்றை எடுப்பது கடினமான விடயமாகவே இருக்கும் என்றும் ஜெகான் பெரேரா மேலும் தெரிவித்தார். (ந-8)

# அம்மாவைப் பார்க்க ஏற்பாடு செய்யுங்கள்!

## நளினியின் மகள் சோனியாவுக்குக் கடிதம்

(சென்னை)

சிறையில் இருக்கும் அம்மாவைப் பார்க்க ஏற்பாடு செய்யுமாறு ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்றுச் சிறையிலிருக்கும் நளினியின் மகள் சோனியாவுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதான நளினி தற்போது ஆயுள் தண்டனை கைதியாக வேலூர் சிறையில் இருக்கிறார்.

இவரது கணவர் முருகன் ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத்தண்டனை பெற்று அதே சிறைச்சாலையில் இருக்கிறர். இவர்கள் இருவரும் காதலித்து வந்தனர். ராஜீவ்காந்தி கொல்லப்படுவதற்கு முன்பு திருமணம் செய்து கொண்டனர். நளினி கர்ப்பம் அடைந்தார். இந்த நிலையில் தான் ராஜீவ் கொலையில் சம்பந்தபட்டு இருவரும் கைதானார்கள். வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர். அங்கு நளினிக்கு பெண் குழந்தை பிறந்தது. அரித்ரா என்று பெயரிட்டனர்.

அரித்ரா சில மாதங்கள் வரை நளினியுடனேயே சிறையில் வளர்ந்தாள். சிறையில் குழந்தையை வளர்ப்பதற்குக் கஷ்டமாக இருந்ததால் இலங்கையில் உள்ள முருகனின பெற்றோரிடம் அரித்ரா ஒப்படைக்கப்பட்டாள்.

இங்கு அவர் வளர்ந்து வருகிறார். தற்போது அவருக்கு 13வயது ஆகிறது. அரித்ரா, தாய் நளினி மற்றும் தந்தை முருகனைப் பார்க்க மிகவும் ஆசைப்படுகிறார். ஆனால அவருக்கு விசா கிடைக்கவில்லை. எனவே சோனியாவின் உதவியை அரித்ரா நாடி இருக்கிறார்.

ராஜீவ் கொலை வழக்கில் முருகன்-நளினி இருவருக்குமே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு இருந்தது. இதில அப்போது சோனியாகாந்தி ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் அனுப்பினார். இருவருக்குமே தூக்குத் தண்டனை அளித்தால் குழந்தை அரித்ரா அனாதையாகி விடுவாள். எனவே இதில் கருணை காட்ட வேண்டும் என்று கூறியிருந்தார்.

இதனால் நளினிக்கு விதித்த தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. அப்போது கருணை காட்டியது போல இப்போதும் சோனியா காந்தி கருணை காட்டுவார் என்ற எண்ணத்தில் அரித்ரா சோனியாவுக்கு இப்போது கடிதம் எழ்தி இருக கிறார்.

இந்தத் தகவலை நளினியின் வக்கீல் சந்திரசேகரன் தெரிவித்தார்.அவர் மேலும் கூறியதாவது, அரித்ரா தனது பெற்றோரை சந்தித்து பல வருடங்கள் ஆகிறது. அவள் இந்தியாவுக்கு வந்து பெற்றோரைச் சந்திக்க விசா பெறுவதற்காக இந்திய தூதரகத்தை அணுகினார். ஆனால் விசா கிடைக்கவில்லை.

எனவே சோனியாகாந்தியின் உதவியைக் கேட்டு கடிதம் எழுதி இருக்கிறார். தூக்குத் தண்டனையில் இருநது தனது தாயைக் காப்பாற்றிய சோனியா காந்தி இப்போதும் கருணை காட்டுவார் என்று எதிர்பார்க்கிறாள்.

நளினி, முருகன் இருவருமே சிறையில் மிகவும் நனடத்தையுடன் செயல்படுகிறார்கள். அவர்கள் மகள் மீது மிகவும் பாசம் வைத்துள்ளனர். இருவரும் சந்திக்கும் போது மகளின் போட்டோவைப் பார்த்து கண் கலங்குகின்றனர்.

ஆர்த்ராவின் கடிதத்தால் அவர்கள் குடும்பம் விரைவில் ஒன்று சேரும் என்று எதிர்பார்க்கிறேன். இவ்வாறு சந்திரசேகரன் கூறினார்.

சிறையில் இருந்தாலும் நளினியும், முருகனும் இந்திராகாந்தி திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் படித்து வருகின்றனர்.

நளினி உணவு-ஊட்டச்சத்து பாடத்தில் சான்றிதழ் படிப்பு முடித்துள்ளார். தற்போது கம்பியூட்டர் பிரிவில் மாஸ்டர் டிகிரி 2ஆம் ஆண்டு படித்து வருகிறார். முருகன் பி.சி.ஏ. படித்து வருகிறார். முருகன் ஓவியம படித்துள்ளார். இதன்மூலம் தேசத் தலைவர்கள் மற்றும் தனது மகளின் படத்தை வரைகிறார்.

இருவரும் ஒருவாரத்துக்கு ஒருமுறை பார்வையாளர் அறையில் சந்தித்துப் பேச சிறைச்சாலை நிர்வாகம் அனுமதியளித்துள்ளது. (ற)

# உலக சுகாதார மாநாட்டின் மூலம் இலங்கைக்கும் பல சலுகைகள்

(கொழும்பு)

ஜெனிவா நகரில் நடைபெற்று வரும் உலக சுகாதார மாநாட்டின் மூலம் இலங்கைக்குப் பல சலுகைகள் கிடைக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் சுகாதாரத் துறையை அபி விருத்தி அடையச் செய்வதே தமது எதிர்பார்ப்பு என அந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அமைச்சர் ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார்.

குறிப்பாக சுனாமியால் பாதிக்கப்பட்ட சுகாதாரத் துறையின் அடிப்படை வசதிகளை மீண்டும் வழமை நிலைக்குத் கொண்டு வருவதற்காக நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வது குறித்து கவனம் செலுத்தியதாக சுகாதார அமைச்சர் கூறினார்.

இந்த மாநாட்டில் சுகாதார அமைச்சரும் அமைச்சின் அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டுள்ளனர். ஜெனீவாவில் நடைபெறும் 58ஆவது உலக சுகாதார மாநாடு எதிர் வரும் 25ஆம் திகதி நிறைவுபெறவுள்ளது. (க-2)

## (வடமராட்சி வடக்கில்)

# நிரந்தர வீடுகளை அமைக்க பலநிறுவனங்கள் முன்வருகை

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு பல நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

அந்த வகையில் "கியூமெடிக்கா" நிறுவனம் கற்கோவளம் பகுதியில் முதற்கட்டமாக 203 வீடுகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அதுபோல் "கெயர்" நிறுவனம் 282 நிரந்தர வீடுகளைப் பருத்தித்துறை, ஆதிகோவிலடி, சேந்தாங்குளம், பொலிகண்டி ஆகிய பகுதிகளில் அமைத்துக கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. போரூட் நிறுவனம் இன்பருட்டி, தும்பளை கிழக்கு ஆகிய பகுதிகளில் 43 நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது. மூவிமெண்டோ நிறுவனம் அல்வாய் வட மத்தியில் நிரந்தர வீடுகளை அமைக்கவுள்ளது.

யு.என்.கபிற்றன் நிறுவனம் பொலிகண்டி கிழக்கில் நிரந்தர வீடுகளை அமைக்கவுள்ளன. இவ்வீடுகள் ஒவ்வொன்றும் ஐந்தரை இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன. (க-35)

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும் - குறள்

வலம்புரி

# உள்ளும் புறமும் வேறானால்...!

ஜனநாயகம் என்றால் என்ன? என்பதை அறியாதவர்கள் ஆட்சி நடத்தினால் அங்கு அமைதி என்பதற்குப் பதிலாக அமர்க்களமே தலைவிரித்தாடும்.

மனிதம் மதிக்கப்படாத சமூகத்தில் எங்ஙனம் முன்னேற்றம் இல்லையோ அதேபோன்ற மனித உரிமைகளைப் பாதுகாக்காத ஆட்சியில் கலவரங்களும் கடபத்தனங்களும் அடிக்கடி அரங்கேறுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இதுவே இலங்கையின் தற்போதைய நிலையாகும். இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் சம உரிமை என்று கிடைக்கின்றதோ அன்றுதான் இந்த நாட்டில் அமைதியும் அபிவிருத்தியும் ஏற்படும். இது உறுதி.

ஆனால் இலங்கை அரசியல் அறமிழந்துவிட்டது. தன் வாழ்வியலுக்காக யாரையும் தாழ்த்தலாம் என்ற ஆட்சி அதிகாரம் கோலோச்சும் போது சம உரிமையும் நீதியும் எதிர்பார்க்க முடியாதவையே.

எனினும், இதற்கெல்லாம் காரணம் யார் என்று அறிவது தேவையானதாகும். தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை ஜனநாயகம் மக்களிடம் ஒப்படைக்கும்போது அதனை மக்கள் சரிவரச் செய்யாத நிலையில் அதன் விளைவை ஒட்டுமொத்த மக்களும் அனுபவித்தாக வேண்டியிருக்கும்.

அந்த அனுபவிப்பே தற்போது நம் மண்ணில் நடந்துகொண்டிருக்கிறது. ஆம், தேர்தல் காலங்களில் உண்மையான தலைமைத்துவத்தை ஆட்சி அதிகாரத்தால் அமர்த்த மக்கள் தவறிவிடுகின்றனர். போலிப் பிரசாரங்கள், பொய் உறுதியுரைகள் இவற்றில் மதிமயங்கி மக்கள் தம் தீர்ப்புரிமையை துஷ்பிரயோகம் செய்கின்றனர். அதனால் அரசியலுக்கு எந்தவித அருகதையும் அற்றவர்கள் ஆட்சிப்பீடம் ஏறுமளவுக்கு வந்துவிடுகின்றனர். குறிப்பாக ஜே.வி.பி. போன்ற பேரினவாதிகள் ஆட்சி அமைப்பதற்கு வேண்டியவர்களாக உள்ளனரெனில் இலங்கை நாட்டின் ஜனநாயகம் எவ்வாறு இருக்கின்றதென்பதை உணரமுடியும்.

இலங்கையில் அமைதி, சமாதானம் ஏற்பட வேண்டுமானால் அதனை ஏற்படுத்தும் பெரும் பொறுப்பு பெரும்பான்மை சிங்கள மக்களிடமே இருக்கின்றது. ஜே.வி.பி. போன்றவர்களை ஆட்சியில் அமர்த்திவிட்டு நாட்டில் அமைதியை எதிர்பார்ப்பது இந்த நூற்றாண்டின் முதற்தர அறியாமையாகும். நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதன் மூலமாக தமது அரசியலை வளர்ப்பதே ஜே.வி.பியின் இலக்காகும். இந்த இலக்கு இந்த நாட்டில் மனித உரிமையை பறித்தெடுக்குமே தவிர வேறு எந்தப் பயனையும் தராமாட்டாது. இந்த உண்மையை சிங்கள மக்கள் இன்னமும் புரிந்துகொள்ளவில்லை என்றே கூறவேண்டும்.

அதேநேரம் ஆட்சிப் பீடத்தின் அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ள இந்த நாட்டின் அதியுத்தம ஜனாதிபதி அவர்கள் முதலில் உண்மையைப் பேசவேண்டும். உள்ளொன்று நினைத்துப் புறம் ஒன்று பேசுவது இந்த நாட்டையே அழித்துவிடும்.

இலங்கையில் நீண்ட காலமாக நிலவும் இனப் பிரச்சினைக்கு இன்னமும் முடிவு காணப்படாததற்கான காரணமே இலங்கை அரசியல் தலைமைகளில் உள்ளும் புறமும் வேறுபட்டிருப்பதாகும்.

ஆக, நாட்டின் ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் சொல்வதைச் செய்ய, என்று முன்வருகிறார்களோ அன்றுதான் இனப்பிரச்சினைக்கான தீர்வும் சாத்தியமாகும்.

# பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கம் வெளியிடப்படின் நாம் ஆதரிப்போம்

## -ஐ.தே.க. மூத்த தலைவர் ஜோசப் மைக்கல் பெரேரா

(கொழும்பு)

உத்தேசப் பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கத்தினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்டால் அதன்னை முழுமையாக ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கும் என்று கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவிதத்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியோ மறறவர்களோ பொதுக்கட்டமைப்பை ஆதரிக்கிறார்களோ எதிர்க்கிறார்களோ அதைப் பற்றி எம்க்கு எவ்வித கவலையுமில்லை. நாங்கள் பொதுக்கட்டமைப்பினை ஆதரிக்கத் தயார். ஆனால் அதில் ஒரு சிக்கல் உள்ளது. பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கத்தையும் முழுவிபரத்தையும் ஜனாதிபதி சந்திரிகா குமராதுங்க வெளியிடவேண்டும். இதனை அவர் செய்வார் என நம்புகிறோம்.

ஜனாதிபதி இதனைச் செய்வாராயின் நாங்கள் பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிப்பது மட்டுமன்றி அதனை உருவாக்குவதறகு இடைஞ்சலாகவுள்ள அனைத்துத் தடைக்கற்களையும் அகற்றி ஜனாதிபதிக்கு நேர்வழிகாட்டுவோம்.

நாங்கள் ஜனாதிபதியைப் போல இதனை வாய்ப்பேச்சாக சொல்லவில்லை. இதனைச் செய்து தர நாங்கள் உறுதியளிக்கின்றோம்.

பொதுக்கட்டமைப்பினை உருவாக்கினால் ஜே.வி.பி பதவி விலகும் என அறிவித்துள்ளது. ஜே.வி.பி அரசிலிருந்து விலகினால் நாங்கள் ஆதரவு தருவோம். ஆனால் எமது கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுக கொண்டார். (ற-4)

# பொதுக்கட்டமைப்பு குறித்து சகல கட்சிகளும் தெரியப்படுத்த வேண்டும் -ரணில் விக்கிரமசிங்க

(கல்கம)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அனைத்துக் கட்சிகளும் எழுத்து மூலமாகவோ, வாய்மொழியாகவோ கருத்துக்களைத் தெரியப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



பொதுக்கட்டமைப்பு யோசனை முனவைக்கப்பட்டபோதே முஸ்லிம்களும் சிங்களவர்களும் இதில் இடம் பெறவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியது எனவும் அவர் தெரிவித்தார்.

கல்கமவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதிதான் முடிவெடுக்க வேண்டும். ஏனெனில் முழுப்பொறுப்பும், அதிகாரமும் அவர் கையில்தான் இருக்கின்றது. பொதுக்கட்டமைப்புச் செயல்படுத்த ஜனாதிபதிக்கு துணிச்சல், மனோநிலை இல்லை யென்றால் உடனடியாக அவர் பதவி விலகவேண்டும்.அந்தப் பொறுப்பினை எம்மிடம் தாருங்கள் நாங்கள் செய்து காட்டுகிறோம்.

ஆனால் அண்மையில் ஜனாதிபதி "எனது உயிரைக் கொடுத்தாவது பொதுக்கட்டமைப்பினை உருவாக்கியே தீருவேன்" என அதிரடி அறிவிப்பை விடுத்திருந்தார். அது வரவேற்கத்தக்கது. ஆனால் அது நடைமுறைப்படுததுவதில் மேலும் இரண்டு வார கால அவகாசத்தை அவர் கேட்டுள்ளார்.

இந்தக் கால அவகாசத்தை மக்களிடமோ அனைத்துக் கட்சிகளிடமோ கேட்கவில்லை. சர்வதேச சமூகத்திடமே கேட்டுககொண்டிருக்கின்றார். அதுவும் உதவி வழங்கும் மாநாட்டிற்கு முன்பாகவே ஜனாதிபதி கேட்டிருக்கின்றார்.

எனவே, பொதுக்கட்டமைப்பினை ஜனாதிபதி உருவாக்காவிட்டால் தனது சுயலாபத்திற்காக நிதியினைப் பயன்படுத்த இவ்வறிவித்தலை விடுத்தார் எனறே கருதவேண்டியிருக்கும.

இதேவேளை, பொதுக்கட்டமைப்பினை உருவாக்காவிட்டால கிடைத்த நிதியுதவிகள் கைநழுவிப்போகும் என சர்வதேச நாடுகள் வலியுறுத்தியிருந்தமையினை ஜனாதிபதி மனதிற்கொள்ள வேண்டும்.

கூட்டமைப்பு அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் பூர்த்தியான போதிலும் நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தினால் முடியாமல் போயுள்ளது.

ஜனாதிபதி தனது அதிகாரத்தினைத் தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக கலைத்தார்.

எனினும்,அதன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட கூட்டமைப்பில் அங்கம வகிக்கும் கட்சிகளுக்கிடையே தற்போது பல்வேறு முரணபாடுகள் நிலவிவருகின்றன என்றும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார். (ற-4)

# கிராம அபிவிருத்தி குறித்து ஆராயும் தேவை மதிப்பீட்டு நடவடிக்கைகள்

(ஏழாலை)

நியாப் II உதவித்திட்டத்தின் கீழ் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள் உடுவில் பிரதேசத்தில் மையக் கிராமமாக தெரிவு செய்யப்பட்ட சங்குவேலி, குப்பிளான் ஆகிய கிராமங்களின் மக்கள் தேவைகளை ஆராயும் வகையில் சங்குவேலி கிராமத்தில் எதிர்வரும் 30 ஆம் தகதி திங்கட் கிழமையும், குப்பிளான் கிராமத்தில் 31 ஆம் திகதி செவ்வாய்க கிழமையும தேவை மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் தேவை மதிப்பீட்டு நடவடிக்கையின் போது கிராமங்களின் சகல அபிவிருத்திகள் குறித்தும் ஆராயப்பட இருப்பதாகவும், இந்த நடவடிக்கைகள் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் க.திருவாகரன் தலைமையில் இடம்பெறும் எனவும நியாப் II திட்ட சமூக வலுவூட்டாளர் செல்வி ஏ.சிவநந்தினி தெரிவிக்கின்றார். (க-131)

# போலி வைத்தியர்களை கண்டறிய உதவுங்கள்

(கொழும்பு)

ஆயுள்வேத வைத்தியசாலையில் பதிவு செய்யாமல் சிகிச்சை நிலையங்களை நடத்தி வந்த 150 பேர் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆயுள்வேத வைத்தியசபை தெரிவிக்கின்றது.

இவாகள் தொடர்பான விசாரணைகள் தற்போது ஆரம்பிககப்பட்டுள்ளதாக சபையின் பதிவாளர் எல்.பெரகரா தெரிவித்துள்ளார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய 5 பேருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் குறிப்பிட்டார்.

போலியான முறையில் வைத்தியர்கள் போன்று ஆயுள்வேத வைத்திய ஆலோசனைகளையும் வைத்திய முறைகளையும கற்பிப்போர் தொடர்பாகத் தகவல்களைத் தருமாறு ஆயுள்வேத வைத்தியசபை விடுத்துள்ள அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (க-9)

# அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி அதிகரிக்கப்படும்

அம்பாறை மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு இவ்வருடம் ஒதுக்கப்பட்ட நிதியை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அறிவுரைகளுக்கு அமைய அம்பாறை மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்த 400 இலட்சம் ரூபா 700 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான விசேட பேச்சுவார்த்தை ஒன்று அம்பாறை மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரின் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின் போது மாவட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என ஆலோசனைகள் வழங்கப்பட்டதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரண புனரமைப்பு மற்றும் மீள்கட்டமைப்பு அமைச்சு இந்த நிதியை ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, வடக்கு-கிழக்கிலுள்ள கஷ்டப் பிரதேசங்கள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் அதிகளவில் கவனம் செலுத்தப்பட்டதாகவும் எங்கவித பேதங்களுமின்றி அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு அவற்றை உரிய முறையில் செயல்படுதத வேண்டும் எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (க-2)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

கண்ணாடியில் சிறிது தூசி இருந்தாலும் மங்கலாகவே தெரியும். அதுபோல் கண்ணாடி போன்ற மனம் சிறிது மாசடைந்தாலும் அங்கே குழப்பம் தான் இருக்குமே தவிர சிந்தனையில் தெளிவு இருக்காது. கடவுள் புலனாக மாட்டார். ஆண்டவன் சூரியன்; மனமாக என்ற அஞ்ஞானத்தால் குழப்பமடைந்த மனம் அந்த சூரியனை மறைக்கும் மேகம் போன்றது.

சுவாமி விவேகானந்தர்

# செம்பியன் செல்வனின் மறைவு இலக்கிய உலகிற்கு பேரிழப்பு

## கத்தோலிக்க கலை இலக்கியவட்டம் இரங்கல்

(யாழ்ப்பாணம்)



இலக்கிய உலகில் தன் ஆழ்ந்த தேடலும், ஆற்றல் வெளிப்பாட்டாலும் தனக்கென தனியிடம் வகித்து வாழ்ந்தவர் அமரர் இலக்கிய வித்தகர் 'செம்பியன் செல்வன்'அவர்கள். இவ்வாறு கத்தோலிக்க கலைஇலக்கிய வட்ட செயலாளர் யோசப்பாலா விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலக்கியம் படைப்பதில் மட்டுமல்ல, அதன்படி வாழுதலும் ஒரு படைப்பாளியின் பொறுப்பு என்பதில் தன் கள்ளம் கபடம் அற்ற வாழ்வால் வெளிப்படுத்தியவர்.

பல விமர்சனங்களுக்கு முகம் கொடுத்து ஆழ்ந்த கருத்துக்களை வலியுறுத்துவதில் அவர் முதன்மையானவர். அத்தியடி இலக்கம் 10-ல் உள்ள அவரது இல்லம் இலக்கியவாதிகளின் சந்திப்பு மையமாக எப்போதும் காட்சி தரும். பல்வேறுபட்ட கருத்துக்களை பல்வேறுபட்ட மட்டங்களில் கற்றுத்தேறும் பல்கலைக் கூடமாக, பழைய, புதிய படைப்பாளிகளின் அறிவுத்தேடலின சங்கமமாக களை கட்டும்.

கருத்துக்களை பகிர்வதில், சுவைப்பதில், உள்ளன்பு உறவோடு இலக்கிய குடும்பங்களாக இணைந்த ஒரு நடுநாயகமாக 'செம்பியன் செல்வன்' அவர்கள் விளங்கினார்.

ஒரு படைப்பாளி பிறந்தான், வாழ்ந்தான், இறந்தான் என்பதோடு அவனது வரலாறு முடிந்து விடுவதில்லை. அவன் வாழ்ந்த காலத்தின் பதிவுகள், படைப்புக்கள், வார்த்தைகளோடு கொண்ட வாழ்க்கைமுறையால் உருவாக்கிய சமூகத்தாக்கம் அவன் விதைததுச்சென்ற கருத்தேற்றத்தால் உருவாக்கப்பட்டோரின் வாழ்வியலும் மறைந்த படைப்பாளியை நினைவுபடுத்தும்.அத்தாக்கத்தை உருவாக்கிய இலக்கிய வித்தகர் செம்பியன் செல்வன் என்றும் நினைவுக்குரியவரே.உண்மையில் உரைகல்லாக வாழ்ந்தவர் அவர்.அவர் உறவில்நாமும் இணைந்துவாழ்ந்தோம் என்ற பெருமையில் அவரது பிரிவில் வாடும் குடும்பத்தின் துயரில் நாமும் இணைந்து எம் இதய அஞ்சலியை செலுத்துகிறோம். (ந)

# பட்டதாரி பயிலுநர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சகல பட்டதாரி பயிலுநர்களுக்குமான அவசரமானதும் அவசியமானதுமான கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் உயர்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட பட்டதாரி பயிலுநர் சங்க செயலாளர் வி.தயாபரன் தெரிவித்துள்ளார்.

பட்டதாரி பயிலுநர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் பட்டதாரி பயிலுநர் பதிவு இலக்கத்துடன் தவறாது குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-4)

# திருகோணமலை...

இச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அசோக ஜெயவர்த்தன,கூட்டுப் படைகளின் தளபதி தயா சந்தகிரி, பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ, இராணுவத் தளபதி சாந்த ஹொட்டேகொட, விமானப் படை தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன், திருகோணமலை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் தர்மசிங்கம், சட்டத்தரணி சிவபாலன், ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் ஜெயந்த விஜயசேகர மற்றும் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதக் குருமார்களும் கலந்துகொண்டனர்.

பௌத்த குருமார் எவரும் கலந்து கொள்ளவில்லை. பகல் 11 மணியளவில் ஆரம்பித்து 3 மணிநேரம் வரை சந்திப்பு இடம் பெற்றது. இச் சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் புத்தர் சிலையினை மூன்று தினங்களுக்குள் அகற்றுமாறு கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இந்த மாநாட்டில் அமைதியும் சமாதானமும் இடம்பெறவேண்டும். இதன்மூலமே அனைத்து சமூக மக்களும் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ முடியும்.

எனவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இது தொடர்பாக கலந்துரையாடி இதற்கான உகந்த தீர்வினை காண்பேன் எனவும் தெரிவித்தார்.

இச் சந்திப்பினை முடித்துக் கொண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட குழுவினர் நகரின் மத்தியிலுள்ள பௌத்த விகாரைக்கு சென்று பௌத்த குருமாரைச் சந்தித்த பின்னர் கொழும்பு பயணமாகினர். (ச-04)

# குடத்தனையில்...

இடைப்பட்ட பெண்ணினதாக இருக்கலாம்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண்ணை கொலை செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட பொல்லு ஒன்று எலும்புக்கூட்டுக்கு அருகில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. (ச-4)

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் இராஜகோபால் (செம்பியன் செல்வன்)

ஈழத்தின் மூத்த எழுத்தாளரான திரு.ஆறுமுகம் இராஜகோபால் நேற்று முன்தினம் (20.05.2005) காலமானார். இவர் காலம் சென்ற ஆறுமுகம் தமர்தாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கணேசபிள்ளையின் தம்பியும், புவனேஸ்வரியின் பாசமிகு துணைவரும், இராகுலனின் (தரம் 09பரியோவான் கல்லூரி) அன்புத்தந்தையும், கௌரி, அபி, காயா, ஆனந்தன் ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைகள் முடிவடைந்த பின்னர் அவரது இல்லத்தில் இருந்து திங்கள் காலை 10 மணிக்கு (23.05.2005) அன்று தகனத்திற்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10,புதியவீதி,அத்தியடி
யாழ்ப்பாணம்.

(9566)

தகவல்.
இ.புவனேஸ்வரி
(மனைவி)


## பூப்புனித நீராட்டுவிழா வாழ்த்து

நிகழும் மங்களகரமான தாரண வருடம் வைகாசித் திங்கள் 15-ம் நாள் (22-05-2005)ஞாயிற்றுக்கிழமை இன்றுகாலை 8.00 மணி தொடக்கம் 12 மணிவரையுள்ள சுப வேளையில் பூப்புனித நீராட்டு விழா காணும் 10-ம் வட்டாரம் நெடுந்தீவு மத்தி நெடுந்தீவை வதிவிடமாகக்கொண்ட திரு. திருமதி மரிய ஜெயசீலன் (பேபி) தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி

திருநிறை செல்வி
டயானி பெல்சியா

அவர்களை இறையருள் வேண்டி பல்கலையும் பயின்று பல்லாண்டு காலம் வாழ்கவென மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்;
ஜோன்சன் வேதநாயகம்
சாந்தி, திவ்யா, சாம் (லண்டன்)
பிலிப் மரியநாயகம் குடும்பத்தினர்

இல. 02 மூன்றாம் ஒழுங்கை முத்தமிழ் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.



மனோகரா யாழ்.
06.05.2005 முதல்
சரத்குமார், ரமேஷ், பூஜா மற்றும் பலர் நடித்த




கா.நேரம்: 9.30, 2.30, 6.30, 9.30
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு



நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள்
பிரகாஷ்ராஜ், நவதீப், தேசாஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
அறிந்தும் அறியாமலும்
கா.நே:10.30, 2.30, 6.30 , 9.30(பு.நே)



சங்கானை
22.05.2005 முதல்
சிம்பு, திவ்யா நடித்த




கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)



எதிர்வரும் 24-05-2005 (செவ்வாய்) முதல்
என்.விஜயன் எழுதும்
தமிழகப் பயணம்
(பயணக் கட்டுரைத்தொடர்)
உங்கள் வலம்புரியில் வெளியாகும்






COOL AIR'S
GALANZ AIR CONDITIONERS (SPILT TYPE)
Galanz

* தொலைத்தொடர்பு நிலையங்கள்
* வர்த்தக நிலையங்கள்
* கணனி நிறுவனங்கள்
* காட்சி அறைகள்
* வீடுகள்

ISO 9001 தரச் சான்றதழ் பெறப்பட்டது

எமது சேவைகள்



- பொருத்துதல் இலவசம்
- மூன்றுவருட உத்தரவாதம் (Compressor 3 years, Body 1 year)
- விற்பனைக்கு பிந்தியசேவை
- மூன்று மாதத்திற்கு ஒருமுறை H.F.C வாயு பயிற்சிபெற்ற (U.N.E.P), (N.O.U) United Nations Environment Programme, National Ozone Unit தொழில் நுட்பவியலாளர்களால் குளிரூட்டிகள் பரிசீலனை செய்யப்படும்.

இவைகளுக்கேற்ற குளிரூட்டிகள்

| வகை | விலை |
|---|---|
| 9000 BTU | 43, 500/= |
| 12000 BTU | 53, 500/= |
| 18000 BTU | 68, 500/= |
| 24000 BTU | 88, 500/= |

மேற்குறிப்பிட்ட விலை கையிருப்பு உள்ளவரை மட்டுமே

மேலதிக விபரங்களுக்கு: COOL AIR'S
இல.151 1/4, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P 0777 738888, 0713 080808



EXPOAIR
your friend in the skies...



யாழ் - கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/ 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...




இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.